பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 08 திங்கட்கிழமை (21.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :115

### அரசின் இரட்டைவேடம் அம்பலம்

# அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணாவின் ராணுவ முகாம்

கொழும்பு,மார்ச்21


**விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விரட்டப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்தோர் பொலன்னறுவை மாவட்டத்தில். முழு இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் - முகாம் அமைத்துச் செயற்பட்டு வருகின்றனர். கடந்த 7 மாதங்களாக அங்கிருந்து செயற்பட்டு வரும் அவர்கள், விடு தலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை இலக்குவைத்துத் தாக்குதல்களையும் நடத்தி வருகின்றனர் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கருணா குழுவில் சிறுவர்களும் ஆயுத பாணிகளாக்கப்பட்டுள்ளனர்.**

**கருணாவுக்குத் தாம் ஆதரவு வழங்கவில்லை என்றும் அவர் எங்கிருக்கிறார் என்பது தமக்குத் தெரியாது என்றும் அரசும் இராணுவமும் தொடர்ந்து கூறிவந்த நிலையில் இந்தச் செய்தி நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.**

இத்தகைய அதிர்ச்சிகரமான செய்தி கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றில் புகைப்பட ஆதாரங்களுடன் நேற்றுப் பிரசுரமாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையோரம் இருக்கும் பொலன்னறுவை மாவட்டத்தில், ஹபரண - வாழைச்சேனை நெடுஞ்சாலையில். செவனப்பிட்டியவில் இருந்து 10 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தீவுச்சேனை என்ற தமிழ்க்கிராமம் ஒன்றிலேயே கருணா குழுவினர் முகாம் அமைத்துச் செயற்பட்டு வருகின்றனர். கிராமத்தின் நுழைவாயிலிலேயே இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. வெளியாள்கள் எவரும் கிராமத்துக்குள் செல்லாத வகையில் காவல் தீவிரப்

(14ஆம் பக்கம் பார்க்க)



*கருணா குழுவின் முகாம் இருப்பதாகக் கூறப்படும் கிராமத்தின் நுழைவாயிலில் உள்ள காவலரண் ஒன்றையும் அங்கு ஆயுதம் தாங்கியவர்கள் கடமையில் இருப்பதையும் படத்தில் காணலாம். பத்திரிகையாளர் கண்டதாகக் கூறப்படும் ஆயுதம் தாங்கிய சிறுவன் ஒருவனை உள்படத்திலும் காணலாம்.*

## விபத்துத் தொடர்பான விசாரணைகளினால் இராணுவ உயரதிகாரிகளிடையே முரண்பாடு

கொழும்பு.மார்ச்21

கொழும்பில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இராணுவ வாகன விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகள். இராணுவ உயர்மட்ட அதிகாரிகளிடையே கருத்து முரண்பாட்டையும், மனஸ்தாபத்தையும் உருவாக்கியிருக்கின்றன. என இராணுவத் தலைமையக வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

இரு வாரங்களுக்கு முன்னர் மருதானையில் இந்த இராணுவ வாகன விபத்து இடம்பெற்றது. குறிப்பிட வாகனத்தில் இருந்த, வட பகுதி இராணுவ முகாமொன்றின் உயரதிகாரியான கேணல் ஒருவரும் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் எனக் கூறப்படும் பெண் சிப்பாய் ஒருவரும் படுகாயமடைந்தனர். விபத்து இடம்பெற்றபோது வாகனத்தில் வேறு சில

(14ஆம் பக்கம் பார்க்க)

## கருணா முகாம் என்று ஒன்றுமில்லை மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு. மார்ச்21

'இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கருணாவின் முகாம் என்று எதுவும் இல்லை. கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்று வெளியிட்ட செய்தி முற்றிலும் தவறானது' என்று கூறி முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்நாயக்க.

வெலிகந்த தீவுச்சேனைப் பகுதியில் கருணாவின் முகாம் இருப்பதாக நேற்று வெளிவந்த ஆங்கில வார இதழில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த இதழ், செய்தியுடன் படங்களையும் வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தி தொடர்பாக ஊடகங்களுக்கு இராணுவத் தரப்பின் கருத்தை வெளியிட்ட போதே இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்நாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

கருணா குழுவினரோடு இராணுவத்தினருக்கு எவ்விதத் தொடர்பும் கிடையாது எனவும் அவர் வலியுறுத்திக்கூறினார். (எ-க)

## புலிகளை விமர்சிப்பதா – நாட்டின் அபிவிருத்தியா? எது முக்கியமென ஜே.வி.பி. தீர்மானிக்கவேண்டும்

### கனேடிய செனட் உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு.மார்ச்21

நாட்டின் அபிவிருத்தியா, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான விமர்சனங்களா முக்கியமென்பதை ஜே.வி.பியினர் தீர்மானிக்கவேண்டிய வேளை வந்திருக்கின்றது என கனேடிய செனட் உறுப்பினர் டேர்க் லீ நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இலங்கை வந்திருந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் அங்கம் வகிக்கும் அவர், நாடு திரும்பமுன் ஹோட்டல் ஹில்டனில் வைத்து தமது இலங்கை விஜயம் பற்றிக் கருத்து வெளியிட்டார். அவர் மேலும் கூறுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை வந்த நாங்கள் இங்கே பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோரையும் சந்தித்துக் கலந்துரையாடினோம். சமாதான முயற்சிகள் குறித்தும் நாட்டின் அபிவிருத்தி குறித்தும் பேசினோம். அங்கே கனடாவில், விடுதலைப் புலிகள் இயக்கத்தினரைத் தடை செய்யவேண்டுமென்ற கோரிக்கை பரவலாக விடுக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து இங்குள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் குழுவை படைத்தளபதி சந்தித்தார்

யாழ்ப்பாணம்,மார்ச்21

படையினரால் செய்தியாளர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் குறித்து வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் நிர்வாகக்குழு நேற்று யாழ்.மாவட்ட படைத்தளபதியுடன் பேச்சு நடத்தியது.

யாழ். கோவில் வீதியில் உள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் படையினர் சார்பில் மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், 512 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த மேஜர் வனிகசேகரா மற்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மானிய ஆணைக்குழுத் தலைவரை சந்தித்துப் பேசுவதில் தாமதம்

### நிலைமையை விளக்குகிறார் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்.மார்ச்21

மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சைக் கற்கைநெறி இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரைச் சந்திப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவது குறித்து நான் தொடர்ந்தும் அடிக்கடி தொடர்புகொண்டு வருகின்றேன்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஹெரால்டின் பேட்டி பற்றி விசாரிக்க உலக வங்கிக் குழு ஒன்று வருகின்றது

கொழும்பு,மார்ச்21

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் பீற்றர் ஹெரால்ட் ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார் எனக் கூறப்படும் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் குறித்த உண்மை நிலையைக் கண்டறிவதற்காக உலக வங்கியின் உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இவ்வாரம் இலங்கைக்கு வரவுள்ளது. கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

உலகவங்கியின் வதிவிடப் பணிப்பாளர் தெரிவித்தார் எனக் கூறப்படும் விடயங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சு உலக வங்கியின்

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக வழங்கப்படும் சம்பந்தன் விருது வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், சம்பந்தன் விருதினை பேராசிரியர் சி.மௌனகுருவுக்கு வழங்கிக் கௌரவிப்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட கலாநிதி க.குணராசா, கவிஞர் சோ.பத்மநாதன், தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, முன்னாள் அதிபர் ஆ.சபாரத்தினம் ஆகியோரை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள் : பிரபா)*

# பல்கலையில் சிறப்புற நடைபெற்ற சம்பந்தன் விருது வழங்கல் விழா

நல்லூர்,மார்ச்21

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நினைவாக வழங்கப்படும் சம்பந்தன் விருது வழங்கும் விழாவும் சம்பந்தனின் சிறு கதைகளை உள்ளடக்கிய 'துறவு' சிறுகதைத் தொகுப்பு, குமாரசாமி சத்தியபாமாவின் 'சைவத்திருமுறைப் பதப்பொருள் அகராதி' ஆகிய இரு நூல்களினது வெளியீட்டு விழாவும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ். பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நேற்றையதினம் சிறப்புற நடைபெற்றன.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், நாரந்தனையூர் முன்னாள் அதிபர் ஆ.சபாரத்தினம், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

விருது பெறும் அறிஞர் பேராசிரியர் சி.மௌனகுரு பற்றிய அறிமுகவுரையை கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) நிகழ்த்தினார்.

சம்பந்தர் விருது பெறும் அறிஞர் பேராசிரியர் சி.மௌனகுருவுக்கு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் முன்னதாக பொன்னாடை போர்த்துக் கௌரவித்ததுடன், விருதும் வழங்கினர்.

பேராசிரியர் மௌனகுருவின் ஏற்புரையை அடுத்து துறவு சைவத் திருமுறைப் பதப் பொருள் அகராதி ஆகிய நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

(எ-111)

# சுதேசிய கொண்டாட்ட விழாவில் சிறந்த பாடகர் போட்டி நடக்கும்

யாழ்ப்பாணம்.மார்ச்21

அரியாலை 86ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் முக்கிய நிகழ்வாக 'யாழ்ப்பாணத்தின் சிறந்த பாடகர்' என்ற போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டிகுறித்து சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் பொதுச்செயலாளர் சரா. புவனேஸ்வரன் விடுத்த செய்திக் குறிப்பில்:-

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு அன்று நடைபெறவுள்ள அரியாலை 86ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் முன்னோடி கலை, விளையாட்டுப் போட்டிகள் தற்போது மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

அந்தத் தொடரில் உள்ளூர் ரீதியான போட்டிகளும், மாவட்ட ரீதியான போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. இறுதி நாள் நடைபெறவுள்ள மாவட்ட ரீதியான 'யாழ்ப்பாணத்தின் சிறந்த பாடகர்' போட்டிக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுவருகின்றன. இந்தப் போட்டி தொடர்பான விவரங்களை சுதேசிய திருநாள கொண்டாட்ட விழாவின் பொதுச் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

12.04.2005 அன்று அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அமரர் விஸ்வநாதன் அரங்கில் ஆரம்ப காலை நிகழ்வுகளும் போட்டிகளுக்கான பரிசளிப்பும் இடம்பெறும்.

14.04.2005 அன்று பகல் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டிகளும் கழகங்களுக்கான அஞ்சல் ஓட்டமும் இடம்பெறும்.

14.04.2005 அன்று மாலை அரியாலை சன சமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கில் சிறப்புக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். ஐங்கரன் இசைக்குழுவினரின் இசைமைப்பில் 'யாழ்ப்பாணத்தின் சிறந்த பாடகர்' போட்டியும், யாழ். - கல்வியியற் கல்லூரி நாடகத்துறை விரிவுரையாளர் இ.கமலநாதனின் நெறியாள்கையில் 'தாய்த் திருநாடு' என்னும் நாடகமும் இடம்பெறும்.

10.04.2005 அன்று அதிகாலை உள்ளூர் போட்டியாளர்களுக்கான மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகியன இடம்பெறும் - என்றுள்ளது.

(எ)

# துணைவேந்தரின் கருத்து; மாணவர் கூடி ஆராய்வு

யாழ்ப்பாணம்,மார்ச்21

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சைக் கற்கை நெறி இடைநிறுத்தப்பட்டுள்ளமை சம்பந்தமாக துணைவேந்தர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்த கருத்துக்கள் குறித்து மருத்துவபீட மாணவர்கள் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர்.

எதிர்வரும் 24ஆம் திகதிக்குள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் மருத்துவபீட மாணவர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். இதுதவறுமிடத்து எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்பாக துணைவேந்தர் மற்றும் அவரது உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துத் தீர்வு காணவேண்டும். ஜனாதிபதியைச் சந்திக்கத் தவறுமிடத்து துணைவேந்தர் வளாகத்தினுள் நுழைவது தடுக்கப்படும் - என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(எ-13)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்21

மீசாலை வடக்கு, ஸ்ரீ நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

(எ-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்21

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று ஏகாதசித் தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்குக் பூசைகள் ஆரம்பமாகி 10 மணியளவில் வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்று, தொடர்ந்து தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

(எ-203)

# வடகொரியா பேச்சுக்களுக்குத் திரும்பவேண்டும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

டோக்கியோ.மார்ச்21

வடகொரியா அதன் அணுவாயுத விவகாரம் தொடர்பாக ஆறுதரப்புப் பேச்சுகளுக்கு உடனடியாகத் திரும்பவேண்டும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த ரைஸ், தலைநகர் டோக்கியோவில் உரையாற்றினார். அப்போதே இவ்வாறு கூறினார் அவர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:-

வடகொரியாவைத் தாக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை ஆனால், அமெரிக்காவின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிப்பதாக வடகொரியாவின் அணுசக்தி இலட்சியங்கள் அமைந்திருக்கின்றன.

எனவே, வடகொரியாவின் அணுத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்கம் கொண்ட சர்வதேச பேச்சுக்களுக்கு அந்நாடு உடனடியாகத் திரும்பவேண்டும்.

பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமானால் இந்தப் பிரச்சினை குறித்து முறையாக ஆராயலாம். இப்பேச்சுக்களில் வடகொரியா விரும்புகின்ற வகையில் அதற்கு மரியாதை வழங்கப்படும்.

கிழக்காசியப் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் ஜனநாயகச் சீர்திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முன்வைத்த செயற்றிட்டத்தில் முன்னேற்றம் காணும் நோக்கில் அப்பகுதி நாடுகள் ஒன்றுகூடவேண்டும்.

இந்த இலட்சியங்களை எட்டுவது தொடர்பில் - அடைவது தொடர்பில் ஜப்பான் ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டியாக இருக்கின்றது. ஆனால், சீனா ஜனநாயகத்தைத் தழுவுதல் அவசியம் என்றார் ரைஸ்.

ஜப்பான் விஜயத்தை முடித்துக்கொண்ட கொண்டலிசா ரைஸ் தென்கொரியாவுக்குச் சென்றார்.

ஜப்பானில் குறிப்பிட்ட கருத்துக்களையே தென்கொரியாவிலும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஆராய்ந்துள்ளார்.

ரஷ்யா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், வடகொரியா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ள பேச்சுக்களில் பங்குபற்றவேண்டுமானால், அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையில் நேரடித் தொடர்புகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் -

மற்றும் பல நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும் என்றும் - வடகொரியா அறிவித்துள்ளது.

வடகொரியாவின் அணுவாயுத விவகாரத்திற்குத் தீர்வுகாணும் வகையிலான நான்காவது சுற்றுப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படுவதற்கு ஜப்பான் சகலவித உதவிகளையும் வழங்கும் என்றும் அந்த நாட்டின் அதிகாரிகள் உறுதி கூறியுள்ளனர்.

ஆசிய நாடுகளில் மேற்கொண்டுள்ள விஜயத்தின் இறுதிக்கட்டமாக சீனா சென்றிருக்கும் கொண்டலிஸா ரைஸ், 'வடகொரியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான நல்லுறவுகளை உபயோகித்து அந்நாட்டை பேச்சுமேசைக்கு அழைப்பது சீனாவின் கடமையாகும்' என்று வற்புறுத்தவிருக்கின்றார்.

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள புரட்டஸ்தாந்து தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற ஆராதனையிலும் ரைஸ் கலந்துகொண்டார்.

(எ-க)

# நீண்டதூர ஏவுகணையை பரிசோதித்தது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத்,மார்ச்21

நீண்டதூரம் ஆயுதங்களை எடுத்துச்செல்லக்கூடிய ஏவுகணையொன்றை பாகிஸ்தான் நேற்று முன்தினம் வெற்றிகரமாகப் பரிசோதித்திருக்கிறது. 'ஷாகீன் - 2' என்ற இந்த ஏவுகணை 2,000 கிலோமீற்றர் தூரம்வரை செல்லக்கூடியது. பரிசோதனையின்போது இந்த ஏவுகணை தனது இலக்கை குறிபார்த்து தாக்கியது என்று பாகிஸ்தான் இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சௌகத் சுல்தான் தெரிவித்தார்.

ஆனால், எந்த இடத்தில் இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டது என்பதைத் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

இந்த ஏவுகணை பரிசோதனையை பாகிஸ்தான் ஜனாதிபதியும், இராணுவத் தளபதியுமான பர்வேஷ் முஷாரப் நேரில் சென்று பார்வையிட்டார்.

மேற்படி ஏவுகணை இந்தியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் போன்றவற்றில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன்கொண்டது என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சோதனை குறித்து இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கு ஏற்கனவே தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் - பாகிஸ்தான் அரசுத்தரப்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது.

(எ-க)

## உலக அரங்கில்

# எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு உயர்தர 'ஞானபீட' விருது

புதுடில்லி,மார்ச்21

நவீன தமிழ் இலக்கிய உலகின் மூத்த எழுத்தாளரும் மிகச்சிறந்த படைப்பாளியும் சிந்தனையாளருமான த.ஜெயகாந்தன் (வயது 71) 2005ஆம் ஆண்டுக்கான 'ஞானபீட' விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

விருதுபெறும் அவருக்கு 5லட்சம் ரூபா பணமும், பாராட்டுதலும், வெண்கலச்சிலையும் பரிசாக வழங்கப்படவிருக்கின்றன.

1975ஆம் ஆண்டு 'சித்திரப்பாவை' நாவலுக்காக எழுத்தாளர் அகிலனுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. அதன் பிறகு 'ஞானபீட' விருது பெறும் இரண்டாவது தமிழ் எழுத்தாளர் ஜெயகாந்தன் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது தமிழ்ப் படைப்புக்கள் மூலம் இந்திய இலக்கியத்துக்கு மிகச்சிறந்த முறையில் பங்களிப்பு வழங்கினார் என்பதற்காகவே ஜெயகாந்தனுக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது.

'ஜெயகாந்தனின் எழுத்துக்கள் சிக்கலான மனித இயல்பை ஆழ்ந்த உணர்ச்சியோடு யதார்த்தமாக வெளிப்படுத்தியவை. மனிதனின் பல்வேறு முகங்கள் இந்திய கலாசாரத்தின் மாண்பு மரபு ஆகியவை அவரது படைப்புக்களில் வெளிப்படுகின்றன' - என்று அவருக்குரிய பாராட்டிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1934இல் கடலூரில் பிறந்த ஜெயகாந்தன் இதுவரை 40 நாவல்கள், 200 சிறுகதைகள், 15 கட்டுரைத் தொகுப்புக்களை எழுதியுள்ளார். அவருடைய பத்துப்படைப்புக்கள் திரைபடங்களாக எடுக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே தனது 'சிலநேரங்களில் சிலமனிதர்கள்' நாவலுக்காக சாகித்திய அக்கடமி விருது பெற்றவர் ஜெயகாந்தன். சாகித்திய அக்கடமியின் பெல்லோஷிப்பும் பெற்றவர்.

இவர் இயக்கிய முதல் திரைப்படமான 'உன்னைப்போல் ஒருவன்' தேசிய விருது பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

நான்காம் வகுப்புவரை மட்டுமே பாடசாலை சென்ற ஜெயகாந்தன், ஆங்கில மொழியில் புலமை பெற்றவர்.

இவருடைய பல நூல்கள் பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

(எ-க)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தோற்கப் போகும் மூன்றாவது புரட்சி

"தெற்கில் என்றும் இல்லாதவாறு இனவாதத் தீயைக் கக்கிக்கொண்டிருக்கின்றது ஜே.வி.பி. அமைப்பு. தமிழ் இளைஞர்கள் மத்தியில் கனன்று எழுந்து வியாபித்து நிற்கும் விடுதலைத் தீயை விளங்கிக்கொள்ளாத - உணர்ந்துகொள்ளாத - ஜே.வி.பி. மீண்டும் ஒரு புரட்சிக்குத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கின்றது. இந்தச் சூழலை அறிவியல் ரீதியாக நாம் புரிந்துகொள்ளவேண்டும்"

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் கூறியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தத்துவாசிரியரும் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம் வரைந்த "போரும் சமாதானமும்" என்ற நூலின் வெளியீட்டு விழாவிலேயே இவ்வாறு அவர் கூறியிருக்கின்றார்.

ஈழத்தமிழர் மத்தியில் விடுதலைத் தீ கனன்றுகொண்டிருக்கின்றது. அமைதியான வாழ்வுக்கும் நிலையான சமாதானத்துக்குமாக ஏங்கிக்கொண்டிருக்கும் ஈழத்தமிழினம் அதற்காக வாய்ப்பளித்து, விடுதலைத் தீயை விஞ்சவிடாமல் தங்களுக்குள் பூட்டிவைத்து, சாந்தம் பேணுகின்றார்கள். இதைப் புரிந்துகொள்ளமுடியாத ஜே.வி.பி. துள்ளிக் குதிக்கின்றது; அத்துமீறி அடாவடி ஆர்ப்பாட்டம் பண்ண முயல்கின்றது.

ஈழத்தமிழினம் மீது காலங்காலமாகத் தனது ஆதிக்கத்தைத் திணித்து, அந்த இனத்தை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கி, அடிமைகளாக்கி, தன்னை 'எஜமான்' சக்தியாக வளர்த்துக்கொண்டு அதையே தொடரும் மனப்போக்கில் இருக்கின்றது சிங்களப் பேரினவாதத் தலைமை. அந்த எண்ணச் சிந்தனையோட்டத்தின் - பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கின் - மொத்த வடிவமாக இன்று தன்னைத் தோற்றுவித்து நிற்கின்றது ஜே.வி.பி.

ஜே.வி.பி. மீண்டும் ஒரு புரட்சிக்குத் திட்டம் தீட்டுவதைச் சுட்டிக்காட்டுகின்றார் புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன்.

மதியுரைஞர் பாலசிங்கம் வரைந்த நூலின் தலைப்பு 'போரும் சமாதானமும்'. இன்றைய நிலையில் இந்தப் போருக்கும் சமாதானத்துக்கும் இடைப்பட்ட ஒன்றாக ஜே.வி.பியின் இந்தச் சதிப்புரட்சி எண்ணம் எழுந்து நிற்பதுதான் கவனிக்கத்தக்கது. அமைதி நிலையையே போரை நோக்கித் திசை திருப்பி விடும் ஒரு சக்தியாக ஜே.வி.பி. எழுந்துள்ளது.

ஜே.வி.பியின் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்ப்பவர்களுக்கு அதன் தோற்றுப்போன இரண்டு புரட்சி முயற்சிகள் - தீவிரப் போக்குச் செயற்பாடுகள் - துலாம்பரமாகத் தோற்றும்.

ஒன்று - ஆட்சியைப் பிடிப்பதற்காக எழுபதுகளின் ஆரம்பத்தில் முயற்சிக்கப்பட்டது.

மற்றது - அந்நியப் படையின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போர் என்ற பிரகடனத்தோடு நடத்தப்பட்டது.

தெளிவான கொள்கை நிலைப்பாடோ, இலட்சியப் பற்றுறுதியோ, நியாயப்படுத்தக் கூடிய இலக்கோ இல்லாமல், மனம்போன போக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் புரட்சி முயற்சிகள் அவற்றின் நோக்குப் பிழைத்த காரணத்தால் தோற்றுப்போயின.

இந்திய அமைதிப்படையின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம் என்ற பெயரில் தென்னிலங்கையில் இரண்டாவது புரட்சி முன்னெடுக்கப்பட்ட போதிலும், ஆக்கிரமித்த இந்தியப் படையை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு ஜே.வி.பி. ஆக்கபூர்வமாக எதையும் செய்யவில்லை. அதன் இலக்கு, எண்ணம், முயற்சி, திட்டம் எல்லாமே இந்தியப் படையின் ஆக்கிரமிப்பை, தென்னிலங்கைச் சிங்களத்தைத் தனக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பதற்குத் தூண்டிவிடும் ஒரு விடயமாக நன்கு பயன்படுத்திக்கொள்வதாக மட்டுமே இருந்தது.

இந்த இரண்டு புரட்சி முயற்சிகளுமே பெரும் இரத்தக் களரிக்கும், ஆயிரக்கணக்கானோரின் உயிர்ப் பலிக்கும், உடைமை, சொத்துக்கள் அழிவுக்கும் வழி கோலின. இறுதியில் அடியோடு தோற்றுப் போயின.

இப்போது ஜே.வி.பி. முன்னெடுக்க விரும்பும் மூன்றாவது புரட்சியின் சதியும் முன்னையதைப் போலவே தோல்வியில் முடியும் என்பது நிச்சயம். ஆனால், முன்னைய இரண்டைப் போலவே பேரழிவுக்கு இதுவும் வழிகோலிவிடும் என்பதுதான் கவலைக்குரியது.

முன்னையதைப் போலவே இந்தப் புரட்சி முயற்சியும்- ஈழத்தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் ஒரு தீர்வை அவர்களுக்கு வழங்கவிடாமல் தடுக்கும் இந்த எத்தனமும் - நியாயப்படுத்த முடியாத ஒரு சதித்திட்டமாகவே, போக்காகவே உள்ளது.

நியாயமான உரிமைகள் தமிழர்களுக்கு வழங்கப்படுவதற்கு எதிராகச் சிங்களப் பேரினவாதத்தைத் தூண்டிவிடுவதன் மூலம் தென்னிலங்கைச் சிங்களத்தில் தனது ஆதரவுத் தளத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் எனக் கனவு கண்டு திட்டம் தீட்டுகின்றது ஜே.வி.பி.

தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதற்கு எதிராகப் பெரும் புரட்சி செய்யப் போகின்றவர்கள் போல ஜே.வி.பி. தலைவர்கள் பண்ணும் எடுப்புக்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் காரணம் இதுதான். தென்னிலங்கையில் இவ்வாறு தமது ஆதரவுத் தளத்தை விஸ்தரித்துக் கொள்வதில் அவர்கள் கணிசமான வெற்றியும் பெறலாம். ஏனெனில், பேரினவாத சிந்தனையில் ஊறித்திளைத்த அந்தச் சமூகம் இத்தகைய மேலாண்மைவாதப் பிரசாரங்களுக்கு விரைவில் - துரிதமாக - எடுபடுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஆனால், ஜே.வி.பியின் இந்தப் பிரசாரம் எடுபட்டு, அமைதி வழியில் - சமாதான முறையில் - தமிழர்களுக்கு உரியவை வழங்கப்படுவது மறுதலிக்கப்படுமானால் விளைவு என்னவாகும்?

இலங்கைத் தீவில் மீண்டும் இரத்த ஆறு ஓடும். ஈழத் தமிழர்கள் தங்களுக்கு உரியதைப் பிடுங்கியெடுக்க வேண்டிநேரும். வழமை போல ஜே.வி.பியின் இந்த மூன்றாவது புரட்சியும் தோற்றுப்போகும்.

ஜே.வி.பியின் பொறுப்பற்ற பிரசாரத்துக்கு- பேரினவாதத்தைக் கிளர்ந்தெழச் செய்யும் பிரகடனங்களுக்கு - இலகுவில் எடுபட்டுப் போகும் பெரும்பான்மை இன மக்கள் தமது சிந்தனையிலும் கவனத்திலும் கொள்ளவேண்டிய முக்கிய விடயம் இதுவாகும்.

# காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியத்தை யாழ். நகருக்கு இடம்மாற்ற அனுமதி மறுப்பு!

அரியாலை.மார்ச்21

காங்கேசன்துறையில் அமைந்திருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பும் களஞ்சியத்தை யாழ்.நகருக்கு இடம்மாற்றுவதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி வழங்கவில்லை எனத் தெரியவருகிறது.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள எரிபொருள் களஞ்சியத்தில் இருந்தே குடாநாட்டுக்கு எரிபொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் இடம்பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தத்தின்போது அங்கு அமைந்திருந்த களஞ்சியத் தொகுதிக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதனையடுத்து, எரிபொருள் களஞ்சியத்தை யாழ்.பிராந்திய அலுவலக வளாகத்துக்கு இடம்மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

போதிய வசதிகள் இன்றி காங்கேசன்துறையில் இயங்கும் களஞ்சியத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகம நேரில் பார்வையிட்டு அதனை யாழ்.நகருக்கு இடம்மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார்.

ஆனால், களஞ்சியத்தை இடம்மாற்றுவதற்குப் படைத்தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டுவிட்டதாக கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (ஜ-17)

### வடமராட்சியில் பாதிக்கப்பட்டோருக்கு

# செஞ்சிலுவைச் சங்கமும் வீடமைத்துக் கொடுக்கும்

கரவெட்டி.மார்ச்21

வடமராட்சிப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆயிரம் நிரந்தர வீடுகளை அமைத்துச் கொடுக்க செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளை முன்வந்திருக்கிறது.

இந்தத் தகவலை மேற்படி அமைப்பினர் பருத்தித்துறைப் பிரதேச செயலரிடம் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்கான காணிகள் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும்-

வீடமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் - தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, செஞ்சிலுவைச் சங்கம் தற்போது மணற்காட்டில் 500 தற்காலிக வீடுகளை அமைத்து வருகிறது. 500 மாணவர்களுக்கு இந்த அமைப்பினால் சீருடைகள், பாடசாலை உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் - மேலும் இரண்டாயிரத்து 500 மாணவர்களுக்கு சத்துணவு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் -

செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளையின் பொறுப்பாளர் ஆ.அருந்தவராசா தெரிவித்தார். (த-70)

# சுனாமியில் உயிரிழந்தோருக்காக யாழ்.நாகவிகாரையில் பிரார்த்தனை



நாகவிகாரையில் சர்வமதப் பிரார்த்தனைக் காட்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச்21

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கான ஆத்மசாந்தி வேண்டியும் நாட்டின் பாதுகாப்புக் கருதியும் யாழ். நாகவிகாரையில் சர்வமதப் பிரார்த்தனைகள் ஒழுங்குசெய்யப்பட்டிருப்பதாக யாழ். பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்திருக்கின்றது.

கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகிய இந்தப் பிரார்த்தனைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுதொடர்பாகப் பாதுகாப்புப் படைத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மூன்று மாத புண்ணியதான கிரியைகளைக் கண்டிப் பகுதியில் இருந்து ஸ்ரீ நாக விகாரைக்குத் தரிசனம் செய்துள்ள இலங்கை ராமசுஞ்ஞா மாநிக்காய பேராதெனியா ஸ்ரீ சாரானந்த வித்தியானந்த தேரர் தலைமையில் நாவலப்பிட்டி ஸ்ரீ குணரத்ன பிரிவினையின் பல்லபான பஞ்ஞாசேகர நாயக்க தேரர் உட்பட 12 தேரர்கள் ஒன்று சேர்ந்து நடத்துவார்கள்.

இந்தப் புண்ணிய கருமங்கள் யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் வழிகாட்டலின் 51,52,53,55 சேனையகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன. 'உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக தீப ஆராதனை' என்ற பெயரில் ஹேவாகொட ஸ்ரீ சாரானந்த விகாரையின் தேரர் நுகாவெல ராகுல தேரர் இந்த சமய வழிப்பாடுகளின் முக்கியத்துவத்தை யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் அவர்களுக்குத் தெளிவுபடுத்தி, இந்தப் பூஜைகளை கடந்த 18 ஆம் திகதி மாலை ஆரம்பித்துவைத்தார்.

ஆராதனை பூஜைகளின் பிறகு பிரித், கதாபிரசங்கம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்த கதாபிரசங்கத்தில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மற்றும் 51 சேனையகத்தின் தளபதி, படையணி, கட்டளையிடும் அதிகாரிகள் உட்பட அதிகாரிகள், சிப்பாய்கள் பலரும் கலந்துகொண்டனர். இந்தப் புண்ணிய கரும பூஜைகளை நடத்துவதற்கு யாழ்.நாக விகாரையின் தேரர் வராபிட்டியே கோளித்த தேரர் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளைச் செய்துகொடுத்துள்ளார். மிக முக்கியமான கதாபிரசங்கம் மற்றும் தரும போதனைகள், சர்வத ராத்திரி கதாபிரசங்கம் உட்பட மூன்று மாத புண்ணிய கரும பிரார்த்தனைகள் இடம்பெறும். மேலும் யாழ்.குடாநாட்டில் வசிக்கும் மக்களுக்கு பிரித் நூல் வழங்குதல் மற்றும் பிரித் மணல் விசுறுதல் போன்ற சமய நடவடிக்கைகள் இடம்பெறும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கடன் பெறலாம்!

### மக்கள் வங்கி அதற்கு விசேட ஏற்பாடு

கரவெட்டி, மார்ச்21

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் தமது தொழிலை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விசேட ஏற்பாடுகளின் மூலம் மக்கள் வங்கியில் கடன் பெறலாம்.

வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கடன்வழங்குவது தொடர்பாக மக்கள் வங்கி அதிகாரிகளுடன் மீனவர் சமாசப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர். இதன்போது மீனவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா முதல் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடன் பெறும் மீனவர்களுக்கு மீனவர் சங்கங்கள், சமாசங்கள் என்பனவற்றின் உறுதிப்படுத்தல் - உத்தரவாதப்படுத்தல் கடிதங்கள் மட்டுமே போதுமானது என்று மக்கள் வங்கி அதிகாரிகள் சம்மதித்திருக்கின்றனர் என்று கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்தார். (த-70)

## உதயவாக்கு

விதி ஒரு போக்கிரிப் பையனைப் போன்றது. மனிதர்களின் அழகிய எண்ணங்களை அழித்து நாசம் செய்வதில் தான் அதற்கு ஆனந்தம்.

- காண்டேகர்.

## நாளை

*பங்குனி 09*
*செவ்வாய்க்கிழமை*
*22.03.2005*
*திதி : துவாதசி*
*நள்ளிரவு 12.07 வரை*
*நட்சத்திரம் : ஆயிலியம்*
*முன்னிரவு 7.27 வரை*
*யோகர் சுவாமிகள் குருபூஜை*
*சுபநேரம் : 10.46 - 12.16*
*ராகுகாலம் : 3.16 - 4.46*
*(யாவும் பழைய நேரப்படி)*

### பராமரிப்பில் இருந்த சிறுவன் வெளியேறிய சம்பவம்:

# சிறுவர் இல்லப் பொறுப்பாளரை ஆஜராகுமாறு கோரி நோட்டீஸ்!

யாழ்ப்பாணம்,மார்ச் 21

வலி.மேற்கில் இயங்கும் சிறுவர் இல்லம் ஒன்றில் இருந்து மாணவன் ஒருவன் காணாமற்போனது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காததற்கான காரணத்தைத் தெரிவிக்க நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு குறிப்பிட்ட இல்லத்தின் பொறுப்பாளருக்கு யாழ். நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியிருக்கின்றது.

குறிப்பிட்ட இல்லத்தில் தங்கியிருந்த 13 வயதுச் சிறுவன் ஒருவன் கடந்த மாதம் அங்கிருந்து வெளியேறிவிட்டான். அங்கிருந்து யாழ். நகரை வந்தடைந்த அந்தச் சிறுவன் பஸ் நிலையத்தில் அந்தரித்து நின்றவேளை, சிலர் அவனை விசாரித்து அவனது தாயாரிடம் சேர்ப்பித்தனர் என்று கூறப்படுகிறது.

குறிப்பிட்ட சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் நிலவிய சீர்கேடு காரணமாகவே அங்கிருந்து வெளியேறியதாக சிறுவன் கூறியிருக்கின்றான். அங்கு பழுதடைந்த, புழுக்கள் நிறைந்த உணவே வழங்கப்படுவதாகவும் அங்கு தன்னை சரிவரப் பராமரிக்கவில்லை என்றும் பிரஸ்தாப சிறுவன் தகவல் வெளியிட்டிருக்கின்றான்.

இதையடுத்து, இந்த விடயத்தை சிறுவர் பாதுகாப்புக் குழுவினர் யாழ்.நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர்.

சிறுவர் பாதுகாப்புக் குழுவின் முறைப்பாட்டை ஆராய்ந்த யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், குறிப்பிட்ட இல்லத்தின் பொறுப்பாளரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

குடாநாட்டில் பதிவு செய்யப்படாமல் இயங்கும் சிறுவர் இல்லங்கள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவுக்கு நீதிவான் பணித்துள்ளார். (ஜ-3)



அருள்மிகு
நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி தேவஸ்தான
புனராவர்த்தன நவ (9) குண்டபக்ஷ உத்தம
மகாயாக சம்புரோக்ஷண அஷ்டபந்தன பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

### சிறப்பு நிகழ்ச்சிகள்

21.03.2005 திங்கட் கிழமை கர்மாரம்பம்
24.03.2005 வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 5.00மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச்சாத்துதல்
25.03.2005 வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு மகா கும்பாபிஷேகம்
25.03.2005 வெள்ளிக்கிழமை மாலை விசேட பூஜையும் எம்பெருமான் உள்வீதி – வெளிவீதி உலாவும்

**தெய்வீகப் பேருரைகளும் நாதஸ்வர, தவில் கச்சேரிகளும்**

**21.03.2005 திங்கட்கிழமை மாலை 7.00 மணி**
தெய்வீகப் பேருரை: விடயம் – "கோலங்கள்"
நிகழ்த்துபவர்:– ச. லலீசன்
(ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி)

**22.03.2005 செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணி**
தெய்வீகப் பேருரை: விடயம் – "மனம் போல வாழ்வு"
நிகழ்த்துபவர்:– கு. பாலசண்முகன்
(யாழ். பல்கலைக்கழக மாணவன்)

**23.03.2005 புதன்கிழமை மாலை 7.00 மணி**
தெய்வீகப் பேருரை: விடயம் – "உலகெலாம்"
நிகழ்த்துபவர்:– கி.கேசவன்
(ஆசிரியர், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி)

**24.03.2005 வியாழக்கிழமை மாலை 7.00 மணி**
சிறப்பு நாதஸ்வரக் கச்சேரி,
சங்கீதநாத சாகரம் R.கேதீஸ்வரன் குழுவினர்

**25.03.2005 வெள்ளிக்கிழமை காலை**
**கும்பாபிஷேக நிகழ்வுகளில்**
ஆஸ்தான வித்துவான் S.T.சுந்தரேசன் குழுவினருடன்,
பிச்சையப்பா றஜீவன் குழுவினரின் நாதஸ்வரக்
கச்சேரியும் இடம்பெறும்.

**25.03.2005 வெள்ளிக்கிழமை மாலை7.00 மணி**
தெய்வீகப் பேருரை: விடயம் – "தமிழ்க்குழவி"
நிகழ்த்துபவர். ச. லலீசன்.

முருகப்பெருமான் அடியார்கள் அனைவரும் 12 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இக்கும்பாபிசேக நிகழ்வுகளைக் கருமாரம்பம் தொடக்கம் கும்பாபிஷேகம் வரை காலை மாலை நிகழ்வுகளில் பூரணமாகக் கலந்து கொண்டு எம்பெருமான் அருள் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.

**பரிபாலன சபையினர்**

*முருகன் துணை*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத் திருப்பணிச் சபையினர், பரிபாலன சபையினர் ஆகியோரின் வேண்டுகோளை ஏற்று ஊரெழு வடக்கைச் சார்ந்த ஜெயசர்ஜன் கொன்சக்சன் என்ற நிறுவன அமைப்புக்கூடாக எமது ஆலயத்தில்

* கட்ட நிர்மாண வேலைகள். * கூரைஇரும்புறஸ்க் வேலைகள்
* கூரைமர [கோப்பிய] வேலைகள் * சிற்ப வேலைகள்
* மின் இணைப்பு வேலைகள் * வர்ணப்பூச்சு வேலைகள்
* மாபிள் பதிக்கும் வேலைகள்

ஆகிய வேலைகளை மிகத் தரமான முறையில் தரமான பொருள்களில் மிகக் குறுகிய காலத்தில் நிறைவாகச் செய்து தந்தமைக்காக

**நிறுவன அதிபர் K.சண்முகநாதன் (சண்) அவர்களையும் அவரது தொழில் வல்லுநர்களையும் ஊழியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**பரிபாலன சபையினர், திருப்பணிச் சபையினர்.**

**நெல்லியடி தடங்கன் புளியடி முருக மூர்த்தி ஆலயம் நெல்லியடி, கரவெட்டி.**

**பிரசுர உபயம் : சிவசக்தி இரும்பகம் நெல்லியடி, கரவெட்டி.**

(43319)(52-14-18)

## துப்புரவுப் பணிகளுக்கான கொடுப்பனவைப் பெறலாம்

கரவெட்டி,மார்ச்21

சுனாமி அலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை உழவு இயந்திரங்களால் துப்புரவுசெய்து இதுவரை அதற்கான கூலிப்பணம் பெறாதவர்கள் நாளையும் நாளை மறுதினமும் பருத்தித்துறை சுனாமி கடல் அனர்த்த செயலணி செயலகத்தில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை தகுந்த ஆதாரங்களைக்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நடவடிக்கைச் செயலணிக் குழுச் செயலகம் அறிவித்துள்ளது. (த-70)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





| அமரர் சுவாமிநாதன் பாலசிங்கம் | | திருமதி பாலசிங்கம் சிவபாக்கியம் |
|---|---|---|
| 23-02-1924 | தோற்றம் | 03-02-1930 |
| 19-12-2001 | மறைவு | 25-03-2002 |

(சுவாமியார் வீதி, கொழும்புத்துறை)

திதி: ஏகாதசி

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம் மனதில் நிலைத்திருக்கும்!


நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(சி-41615) (38-24)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்
25 - 11 - 1945



விண்ணில்
19 - 02 - 2005

### அமரர் கிட்டிணன் தியாகராசா

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
உள்ளத்தின் தியாக தீபமே!
மாதம் ஒன்று என்ன பலநூறு ஆனாலும்
எம் இதயத் தெய்வத்தை என்றுமே
எம்மால் மறக்க முடியாது!
உங்கள் ஆத்மசாந்திக்காக
ஆண்டவனை அர்ச்சிக்கின்றோம்.
ஓம் சாந்தி!

இன்று (21-03-2005) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கேணியடி",
இமையாணன், உடுப்பிட்டி. (43298)(26-14-45-24)

- குடும்பத்தினர்.

## இந்தியப் பிரதமரின் விஜயம் ரத்து

கொழும்பு,மார்ச்21

இம்மாத இறுதியில் இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கைவிட்டுள்ளார் என இந்தியத் தூதரகம் தெரிவித்தது.

அரவது இலங்கை விஜயம் குறித்து ஜூலை மாதத்துக்குப் பின்னரே முடிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஜ-3)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி நாகரத்தினம்



மாதனை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி நாகரத்தினம் 18.03.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் அமரர் கந்தசாமியின் அன்பு மனைவியும் திருநாவுக்கரசுவின் பாசமிகு சகோதரியும் சாந்தாதேவி (சுவிஸ்), சற்குணராசா, சுகந்தி (பிரான்ஸ்), நேசராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமசோதி, தனரஞ்சினி, கமலநாதன், காந்தரூபி ஆகியோரின் மாமியாரும் கீதனா, பிருத்திகா, கஜனன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் அமரர் கணபதிப்பிள்ளை மற்றும் பொன்னு, தங்கமுத்து அமரர் செல்வராசா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2005) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*மாதனை,*
*பருத்தித்துறை.* (43334) (39-18-14-24)

தகவல்:
க.சற்குணராசா (மகன்).

# மானிப்பாய் இந்துக் கல்லூரியை 5 விக்கெட்டுகளால் மகாஜனா வென்றது

வலி.வடக்கு,மார்ச்21

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் மகாஜனாக் கல்லூரி 5 விக்கெட்டுக்களாலும் 3 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றுள்ளது.

மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 160 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ராஜ்குமார் 30 ஓட்டங்களையும் பிரசன்னா 40 ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றனர்.

மகாஜனாக் கல்லூரியின் சார்பில் பந்து வீசிய தனஞ்செயன் 6 ஓவர்களில் ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 23 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பிரகலாதன் 7 ஓவர்களில் ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் திலீபன் 14 ஓவர்களில் 8 ஓட்டமற்ற ஓவர்களுடன் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி அணியினர் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 28 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் ரஜீவ் 56 ஓட்டங்களையும் பிரகலாதன் 39 ஓட்டங்களையும் தர்சன் 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ராஜ்குமார் 60 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் பார்த்தீபன் 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வினோத் 74 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது.

வினோத் 47 ஓட்டங்களையும் ராஜ்குமார் 46 ஓட்டங்களையும் பிரசன்னா 29 ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

மகாஜனாக் கல்லூரி சார்பில் பந்து வீசிய திலீபன் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டையும் தனஞ்செயன் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ரஜீவ் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

69 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய மகாஜனாக் கல்லூரி, 5 விக்கெட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்று தமது வெற்றி இலக்கை அடைந்தது.

மயூரன் 27 ஓட்டங்களையும் ஜீவசங்கர் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வினோத் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சாரங்கன் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் பார்த்தீபன் 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (3-86)

## யாழ். பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகள மற்றும் குழுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விளையாட்டுக் கழகங்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் பிரதேச விளையாட்டு அலுவலர் செ.ரமணனிடம் ஒப்படைக்கும்படியும் -

மேலதிக விவரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் தேவைப்படுவோர் நேரில் விளையாட்டு உத்தியோகத்தரைச் சந்திக்கும்படியும் - கேட்கப்பட்டுள்ளது. (3-86)

## யாழ். லீக்குக்கு புதிய நிர்வாகம்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாகிகள் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ளனர்.

ஈச்சமோட்டையில் அமைந்துள்ள லீக்கின் அலுவலகத்தில் கப்டன் ம.ஏ.எம்.குணசிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் புதிய நிர்வாகம் பொறுப்பேற்றது.

புதிய நிர்வாகத்தின் தலைவராக எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளையும் செயலாளராக மு.பிரான்ஸிஸும் உபசெயலாளராக ரி.சுரேந்திரனும் பொருளாளராக ஏ.டன்ஸ்ரனும் உப தலைவர்களாக கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம், எஸ்.ரி.கணநாதன், பி.ஜேக்கப், கே.கணேசநாதன், கே.தர்மரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (3-190)

உதயன் ஊடக அனுசரணையுடன் நடைபெறும்

## எல்லைப்படை மாவீரர் கிண்ண உதைபந்தாட்டம்; இளம்தென்றல் - கலைவாணி அணிகள் மோதல்

யாழ்ப்பாணம்,மார்ச்21

எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணத்துக்கான தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவில் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த இளம்தென்றல் வி.கவும் யாழ்ப்பாணம் லீக்கைச் சேர்ந்த நாவாந்துறை கலைவாணி வி.கவும் இன்று மோதுகின்றன.

உதயன் ஊடக அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன.

பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் மற்றோர் ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அணிகளான கல்வளை விநாயகர் வி.கவும் கலைமகள் வி.கவும் மோதுகின்றன. (3-86-190-203)



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டிகளின்போது அணி நடையில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வலோபி இல்ல மாணவன் செல்வன் எஸ்.ஜெயந்தனுக்கு, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் வெற்றிக் கேடயம் வழங்குவதையும் அருகில் கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை இருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: தொல்புரம் நிருபர்)

## விளையாட்டு

### பூநகரி கோட்ட மெய்வன்மைப் போட்டி

முழங்காவில்,மார்ச்21

பூநகரிக் கல்விக் கோட்டத்தின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை தொடக்கம் மூன்று நாள்களுக்கு நடைபெறும் என்று கோட்டக் கல்விப்பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (த-323)

### சிறப்புற நடைபெற்ற வேரவில் இந்துவின் போட்டி

முழங்காவில்,மார்ச்21

•வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி கடந்த மாதம் 27 ஆம் திகதி அதிபர் ஜெ.கோடீஸ்வரன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

பிரதம விருந்தினராகக் கோட்டக் கல்வி அலுவலர் தி.கணபதிப்பிள்ளை கலந்துகொண்டார். (த-323)

## எளிமையாக நடந்த மெய்வன்மைப்போட்டி

பரந்தன்,மார்ச்21

கிளிநொச்சி கண்ணகை நகர் வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டி வித்தியாலய முதல்வர் திருமதி த.சண்முகநாதன் தலைமையில் எளிமையாக நடைபெற்றது.

நிகழ்வில் விழாச் சுடரினை கிராமசேவை உத்தியோகத்தர் இராசேஸ்வரன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன. வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (3-352)

## ஒட்டுசுட்டானில் விளையாட்டுப் போட்டி

ஒட்டுசுட்டான்,மார்ச்21

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த 12ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றன.

கற்சிலைமடு பரந்தாமன் வி.க., பண்டாரவன்னி வி.க., சமளங்குளம் பாரதி வி.க., ஒட்டுசுட்டான் ஈசுபரன் வி.க., மாங்குளம் மின்னொளி வி.க. ஆகிய ஐந்து கழகங்கள் இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளன.

இப்போட்டிகளின் இறுதியாட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது. (3-341-203)

# றோட்டறக்ட் கழக மென்பந்துக் கிரிக்கெட்: நல்லூர் -யாழ்.நகர் அணிகள் மோதின

### பிரசாத் 149 ஓட்டங்களைக் குவித்தார்

யாழ்ப்பாணம்,மார்ச்21

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தால் யாழ். மாவட்ட றோட்டறக்ட் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட வருடாந்த மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் நல்லூர் றோட்டறக்ட் கழகம் சம்பியனானது.

12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 9 பேர் பங்குபற்றும் இந்தச் சுற்றுப் போட்டியில் நல்லூர் றோட்டறக்ட் கழகமும் யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகமும் இறுதியாட்டத்தில் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் றோட்டறக்ட் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 12 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான மதன்ராஜ், பிரசாத் ஆகிய இருவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 179 ஓட்டங்களைக் குவித்தனர்.

இதில் பிரசாத் 149 ஓட்டங்களையும் மதன்ராஜ் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம் சார்பாக சிவானந்தன் இரண்டு விக்கெட்டுக்களையும் சுவேன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து களம் இறங்கிய யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழக அணி 8.03 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் நகர்மைய அணி வீரர்களான கஜேந்திரன் 14 ஓட்டங்களையும் மயூரன் 11 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் நல்லூர் றோட்டறக்ட் கழகம் சார்பில் பிரசாத், ஜெயகணேஸ், ஓங்காரரூபன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிரஜாந்தன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராகவும் துடுப்பாட்ட வீரராகவும் றோட்டறக்ட் எஸ்.பிரசாத்தும் தொடரின் ஆட்டநாயகனாக றோட்டறக்ட் மயூரனும் இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக றோட்டறக்ட் எஸ்.பிரசாத்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தச் சுற்றுப்போட்டியில் சென்ற ஆண்டுக்கான சம்பியனாகச் சுன்னாகம் றோட்டறக்ட் கழகம் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (3-203)



பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம், அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயம் ஆகியன இணைந்து வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை நடத்தின. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனைக் குருளைச் சாரணர் சகிதம் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியர் க.சிவபாலன் மாலையிட்டு வரவேற்பதைப் படத்தில் காணலாம். இரு பாடசாலைகளினதும் அதிபர்களான சி.சிவராஜன், ந.அமிர்தலிங்கம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

(படம்: வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)

## றேஞ்சல்ஸ் - ஞானகலா அணிகள் சளைக்காமல் திறமையாக ஆடின

வலி.வடக்கு,மார்ச்21

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் றேஞ்சல்ஸ் வி.க. வெற்றிபெற்றது.

பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த றேஞ்சல்ஸ் வி.க. அணியும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞானகலா வி.கவும் நேற்றுமுன்தினம் மோதிக் கொண்டன. ஆட்டம் ஆரம்பமாகி இறுதிவரை மிக விறுப்பாக அமைந்தது. ஆட்டம் ஆரம்பமாகி முதல்பாதிக்கு முன்கிடைத்த சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்தி றேஞ்சல்ஸ் அணி ஒரு கோலைப் போட்டது. ஞானகலா அணிக்கு கோல் போட பல சந்தர்ப்பம் கிடைத்தபோதும் அதை அந்த அணி பயன்படுத்தத் தவறிவிட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் கோல் போடும் சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அவை அவற்றைப் பயன்படுத்தத் தவறிவிட்டன.

இதன் காரணமாக 1:0 என்ற கோல் கணக்கில் றேஞ்சல்ஸ் அணி வெற்றிபெற்றது.

நாமகள் வி.கவுக்கும் சென்.மைக்கல் வி.கவுக்கும் இடையில் நடைபெறவிருந்த ஆட்டம் இடம்பெறவில்லை. (3-86)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்
செல்வி தி.மனோரஞ்சனி அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி திலகவதி திருநாவுக்கரசு

அவர்கள் 18-03-2005 வெள்ளிக்கிழமை காலமாகிய செய்தி அறிந்து மிகவும் கவலையடைகிறோம். பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரருக்குக் கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக் காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,** (26-14-18)
(43312) **யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூ.சங்கம் (வ-து), யாழ்ப்பாணம்.**

---

## Sri Lanka Red Cross Society Community Health Project Jaffna District

**The Post of Project Coordinator.**

Sri Lanka Red Cross Society, Jaffna Branch is calling applications for the post of Project Coordinator for the above Project. Applications should be send under the registered cover to reach on or before 28th March 2005.

To: The Branch Executive Officer
Sri Lanka Red Cross Society
Jaffna District Branch,
No.73, Kandy Road, Jaffna.

Professional Requirements:
- Degree in relevant discipline
  Or
- G.C.E. A/L Bio Science with experience in Medical Project
  Or
- Retired or working Para Medical Staff.

Personal Requirements
- Excellent Medical Knowledge
- Knowledge in Tamil & English to Converse & write.
- Awareness on SLRCS objectives & Activities & also to understand 7 components of Red Cross Movement
- Excellent commutation, Planning & Supervision skills
- Knowledge in computer & experience in NGO's preferred

Only short listed candidates will be called for an Interview.

**Branch Executive Officer**
**Sri Lanka Red Cross Society,**
**Jaffna Branch**
(C/41601)(26-14-18)

---

## எரிவாயு, சிமெந்து விலைகள் உயர்வு

சமையல் எரிவாயுவின் விலையை ஐந்து ரூபாவால் அதிகரிப்பதற்குப் பாவனையாளர் பாது காப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் ஷெல் எரிவாயுவின் விலை 789 ரூபாவிலிருந்து 794 ரூபாவாகவும் லாவ்ஸ் எரிவாயுவின் விலை 780 ரூபாவிலிருந்து 785 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளன.

முன்னதாக ஷெல் எரிவாயுவின் விலையை 114 ரூபாவினாலும் லாவ்ஸ் எரிவாயுவின் விலையை 110 ரூபாவாலும் அதிகரிக்குமாறு மேற்படி நிறுவனங்கள் விடுத்த கோரிக்கை யைப் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை நிராகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஹொல்சிம் லங்கா மற்றும் மகாவலி மெரின் ஆகிய சிமெந்துகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் சிமெந்து மூடையின் விலை 405 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக உயர்ந்துள்ளது. ஏனைய சிமெந்து வகைகளின் விலைகளும் விரைவில் அதிகரிக் கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.(த-க)

---

## உடன் விற்பனைக்கு

**4.2. kw (கமா) வலுவுடைய மின் பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று உடன் விற்பனைக்குண்டு.**
தொடர்புகளுக்கு: 0773147400
(43314)

---

## புதிய கடைகள் வாடகைக்கு

**கோண்டாவில் - பலாலி வீதியில் புதிய கடைகள் சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு.**
தொடர்புகளுக்கு: திருமதி நடராசா
174, பலாலி வீதி, கோண்டாவில்.
(8மணி தொடக்கம் 5மணி வரை).
(43325)

---

## மருந்து விற்பனைப் பிரதிநிதி தேவை

மருந்து விற்பனையில் அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை. அனுபவமுள்ள வர்கள் மட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

☆ *சுய விவரக்கோவை*
☆ *எதிர்பார்க்கும் சம்பளம் முதலியவற்று டன் விண்ணப்பம் 26-03-2005 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.*

**விளம்பர இல.: 2537,**
**மே/பா உதயன்,**
**யாழ்ப்பாணம்.**
(43316)

---

விடுமுறைகால தபால் மூலப்பாடநெறி

## SPOKEN ENGLISH

பாடசாலை மாணவர்களுக்கான **SAAMSTECH** இன்

### ஆங்கில டிப்ளோமாச் சான்றிதழ்

~~1000/-~~
**சலுகைக் கட்டணம் : ரூபா 250/-**
**விண்ணப்பிக்கும் கடைசிநாள்: 22.03.2005**

பாடசாலை அதிபர் ஊடாக அல்லது நேரடியாக '**SAAMSTECH**' என்ற பெயருக்கு '**JAFFNA**' தபாலகத்தில் மாற்றத்தக்கதான ரூபா 250/- இற்கான காசுக்கட்டளை மற்றும் இவ்விண்ணப்பத்தினை வேறுதாளில் பூர்த்திசெய்து அனுப்பிச் சேரலாம்.

**சலுகைக்கட்டண விண்ணப்பப்படிவம்**

பெயர் : ..........................................................

வகுப்பு மற்றும் பாடசாலை : ..........................................

முகவரி : ........................................................

**22.03.2005** இற்குப் பின் விண்ணப்பிப்பவர்கள் ரூபா 1000/- இற்கான காசுக்கட்டளையினை அனுப்ப வேண்டும்.

**SAAMSTECH, 841, Hospital Road, Chundikkuli, Jaffna.**
(413318)(26-14-18)

---

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

வணிக நிலையம் நடத்தும் அங்கத்தவர்கள் யாவரும் இவ்வருடத்திற்கான சந்தாப் பணமாக ரூபா 1000/= (ஆயிரம்) 31-03-2005ஆம் திகதிக்கு முன் செலுத்தித் தங்களின் அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறும் எமது மன்ற எல் லைக்குள் வணிகம் நடத்துபவர்களும் இதுவரை மன்றில் அங்கத்துவம் பெறாத உரிமையாளர்களும் 31-03-2005 ஆம் திகதிக்கு முன் தங்களின் அங்கத்துவத்தை உறுதிப் படுத்திக்கொள்ளுமாறும் 2000ஆம் ஆண்டின் நஷ்டஈடு விண்ணப்பம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் ஒப்ப டைக்கச் சில ஆவணங்கள் இல்லாதபடியால் தங்களின் விண்ணப்பத்தை முழுமையாகப் பூர்த்திசெய்ய முடியா திருப்பதால் 31-03-2005ஆம் திகதிக்கு முன்பாக மன்றப் பணிமனைக்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தனக்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.
செயலாளர்,
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**
(சி-41604)(26-14-18)


---

# திருமண அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான தாரண வருடம் பங்குனித் திங்கள் 10ஆம் நாள் (23.03.2005) புதன்கிழமை முற்பகல் 9.24 மணி முதல் 11.16 மணி வரையிலான மகர நட்சத்திரமும் இடப லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரன் திருநிறை செல்வன்
எமது புத்திரி திருநிறை செல்வி



பாலகிருஷ்ணன் (கோபால்) அவர்களுக்கும்
ராஜவதனா (வதனா) அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு பெரியோர் ஆசியும்பெற்று வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன்**
**S.றஞ்சிதமலர், திருமதி சேகர்**
**ஊரெழு மேற்கு, சுன்னாகம்.**

*தங்கள் நல்வரவை நாடும் :*

*இரு வீட்டார் அழைப்பு*

**தம்பு சண்முகநாதன்,**
**திரு.திருமதி சோதிலிங்கம் ரதி,**
**திரு.திருமதி கிரிதரன் சுகி,**
**செட்டிக்குறிச்சி, சுழிபுரம்.**

குறிப்பு:-தனி அழைப்புத் தர முடியாத காரணத்தால் இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
(C/41608)(52-14-18)

# சேது திட்டத்தை இரு நாடுகளும் கூடி முன்னெடுப்பதே நன்மை

**சேது சமுத்திரத்திட்டத்தினால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள நன்மை, தீமைகள் பற்றி பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரஞ்சித் கலப்பதி கடந்த 09-03-2005 அன்று யாழ். வர்த்தக கைத்தொழில் மன்றத்தில் வாசித்த ஆய்வுக்கட்டுரையின் தொகுப்பு இங்கு தரப்படுகிறது.**

**1860** இல் தளபதி ரெயிலர் என்பவரால் முதன் முதலில் திட்டம் முன்மொழியப்பட்டது. 1861 முதல் 1903 வரை காலனித்துவ அதிகாரிகளால் தொடர்ச்சியாகப் பிரேரணைகள் முன்மொழியப்பட்டன.

1922 ஆம் ஆண்டு துறைமுகப் பொறியியலாளர் சேர் ஹொபேர்ட் பிறின்கோவின் திட்டம் முன்வைக்கப்பட்டது.

1955இல் சேர் இராமசாமி முதலியார் தலைமையிலான சேது சமுத்திரத் திட்டக் குழுவினரின் திட்டம் முன்வைக்கப்பட்டது. இந்த ஆரம்ப முன்மொழிவுகள் சிறு கப்பல்கள் பிரயாணம் செய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தன. பாக்குநீரிணையை ஆழமாக்க வேண்டிய அவசியம் அப்போது இருக்கவில்லை.

தற்போதைய திட்டம் ஒரேநேரத்தில் தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தியையும் பாரிய கப்பல்கள் பயணம் செய்வதையும் நோக்கமாகக் கொண்டதுடன், பாக்குநீரிணையை ஆழமாக்கும் திட்டத்தையும் கொண்டுள்ளது. சேது சமுத்திரத்திட்டம் ஆரம்ப நிலையிலேயே பல எதிர்மறையான கருத்துக்களைத் தோற்றுவித்துள்ளது. தொழில்நுட்ப ரீதியான திட்டம் இன்னமும் உருவாக்கப்படவில்லை.

### சேது சமுத்திரம் எதற்காக?

* இந்தியக் கடற்பிராந்தியத்தில் கிழக்கு, மேற்குக் கரைகளுக்கிடையில் இந்தியக் கடற்படையினரின் நடமாட்டத்தை அதிகரிப்பதற்கு (பாதுகாப்புக் காரணங்களுக்காக) -
* தென்னிந்தியக் கடற்போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதற்காக -
* கடற்போக்குவரத்தின் நேரத்தைக் குறைப்பதற்கு -
* பாரிய மீன்பிடிக்கலன்கள் இலகுவாகச் சென்று வர வழிவகுத்தல் -
* வங்காள விரிகுடாவில் உள்ள எண்ணெய் வளம் பற்றிய ஆய்வை விரிவுபடுத்தல்-

### தற்போதைய கடற்போக்குவரத்து ஆழம்

பாக்குநீரிணை 8 மீற்றர் ஆழமானது. வங்காள விரிகுடா 11-12 மீற்றர் ஆழமானது. ஆதாம் பாலம் 1.5 மீற்றர் தொடக்கம் 3.5 மீற்றர் ஆழமானது. வேறுபட்ட கால்வாய்களையும் மாறுபாடடையக் கூடிய மணல்மேடுகளையும் கொண்டது. மன்னார் வளைகுடா மிக ஆழமானது.

தென்னிந்தியத் துறைமுகங்கள் தற்போது 11-12 மீற்றர் ஆழமானவை. இதை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது எவ்வளவு தூரம் நடைமுறைக்குச் சாத்தியமானது என்பது கேள்விக்குறி. கொழும்புத்துறைமுகம் 15மீற்றர் ஆழமானது. இதை 17மீற்றராக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பு தெற்குத் துறைமுகத்தில் இதை முதலில் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தற்போதைய திட்டப் பிரேரணை

கால்வாய் இரண்டு கடல் மைல் தூரத்தைக் கொண்டது. கால்வாயின் மட்டம் 300 மீற்றர். 12 கால்வாய்களுடன் கால்வாயின் ஆழம் 10-12 மீற்றரும் 14மீற்றரும் கப்பற் பிரயாணம் 9.15மீற்றர் 10.7 மீற்றர் 12.8 மீற்றர் கால்வாயின் நீளம் 1-52 கி.மீற்றர் தோண்டப்படவுள்ள ஆழம் ஆதாம்பாலத்தின் 20கிலோ மீற்றர் பாக்குநீரிணையில் 36 கி.மீற்றர் 12 மீற்றர் ஆழமான கால்வாய் தோண்டப்படவுள்ள கனவளவு 32.5 மில்லியன் மீற்றர் ஆதாம்பாலத்துக்குக் குறுக்காக அத்துடன் 51.0 மில்லியன் பாக்கு நீரிணையில் (12 மீற்றர் கால் வாய்ககாக).

### பாக்கு நீரிணையின் தற்போதைய பௌதிக அமைப்பு

ஆதாம்பாலம் 28 கி.மீ (21கி.மீ.தண்ணீர்) குளிரான சாய்வான அலைகளைக் கொண்டது.

மாரி காலத்தில் நீரோட்டம் குளிரானதாகவும் ஒரு சீரான உந்துகையுடனுமிருக்கும். ஆதாம்பாலத்தின் மண்ணியலமைப்பு மென்மையானதும் கடினமானதுமான மண்ணைக் கொண்டது.

வங்காளவிரிகுடா மன்னார் வளைகுடாவை விட குளிர் குறைந்ததும் உவர்த்தன்மை (உப்பு) குறைந்ததுமாகும். இத்திட்டப் பகுதியின் நீர்ச்சுற்றோட்டம் போக்குவரத்துப் பற்றிய விவரங்களுக்கும களத்தரவுகள் பற்றிய விவரங்களுக்கும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

### உயிரியல் மூலங்கள்

இந்திய மீன்பிடி 1992ஆம் ஆண்டு 55,325 தொன்னாக இருந்தது. இது 2001இல் 20,5700 தொன்னாக அதிகரித்துள்ளது.

இதில் சிப்பி, சங்கு, கடற்பாசி, முத்துக் குளியல் என்பன அடங்கும்.

வங்காள விரிகுடாவிலும் மன்னார் வளைகுடாவிலும் அரிய கடல்வாழ் உயிரினங்களான கடலாமை, டொல்பின், கடற்பசு, திமிங்கிலம் போன்ற விலங்கினங்கள் வாழ்கின்றன. முத்துச சிப்பி, சங்கு, சிப்பி, பவழப்பாறை, கடற்பசு எனபன கால்வாயிலிருந்து தொலைவில் இருபத்தொரு தீவுகளின் கரைகளிலும் காணப்படுகின்றன.

### கால்வாய் மண்

கடலுக்கடியிலுள்ள சேறு பாரியளவில் இல்லாமல்போகும் அல்லது அழிந்துபோகும் அபாயம் உள்ளது. இரு நாடுகளுமே வருடாந்தம் பாரிய சூழல் அழிவுக்கு முகம்கொடுக்க நேரிடும்.

கடற்படுகை அழிந்துபோகும் கற்துர்ப்பத்தில நல்ல களிமண் அழிந்து கலங்கிய நீரோடம் ஏற்படலாம். இதனால், கடற்புற்கள், பவழப் பாறை என்பன அழிந்துபோக வாய்ப்புண்டு.

தோண்டப்படும் மண்ணைக் குவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பிரதேசம் இலங்கைக் கடல எல்லைக்கு மிக அருகிலுள்ளது. இது இலங்கைக் கடற்பரப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

நீரியல் சம்பந்தமாக மேலெழுந்தவாரியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படவில்லை.

உள்நாட்டில் ஏற்படவுள்ள தாக்கம் பற்றி திரிபுபடுத்தப்பட்ட தகவல்களே வழங்கப்படும்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள மண் அகழ்வுத் திட்டம் நம்பத்தகுந்ததல்ல. பாரிய சூழல் அழிவு ஒன்று ஏற்படலாம்.

இத்திட்டத்தின்படி, கால்வாயில் அகழ்ந்தெடுக்கப்படும் மண்ணால் ஆதாம்பாலத்தில் செயற்கைத் தீவுகள் உருவாக வாய்ப்புண்டு.

துரதிர்ஷ்டவசமாக ஏனைய கால்வாய்கள் தோண்டப்பட்டபோது அதன்படிவுகள் பக்கவாட்டில் கொட்டப்பட்டன. ஆனால், சேது கால்வாய் நீருக்கடியில் தோண்டப்படவுள்ளதால் இது நீரமட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். கடற்படுகையில் தோண்டுவதை இயலுமானவரை குறைத்துக் கொள்ளவேண்டும். இல்லையேல், வருடாந்தம் பாரிய சூழல் அழிவை எதிர்கொள்வதுடன், பராமரிப்புப் பணியிலும் ஈடுபட வேண்டியிருக்கும். இத்திட்டத்தில் கட்டுப்பாடுகள், தளர்வுகளை மேற்கொள்வதற்கு இலங்கை பூரண பங்களிப்பை வழங்கவேண்டும்.

தேவை கருதி கால்வாயை இந்தியக் கடல் எல்லைக்கு நகர்த்தலாம்.

இரு அரசுகளும் இணைந்து பாலம் அமைபது பற்றியோ கால்வாய் தோண்டுவது பற்றியோ ஆலோசிக்கலாம்.

இது சாத்தியமானால் சூழல் மாசுபடாத வகையில் சிறந்த திட்டமொன்றைத் தீட்டலாம்.

### கப்பற் போக்குவரத்து அனுகூலங்கள்

தூத்துக்குடிக்கும் சென்னைக்கும் இடையிலான தூரம் 400 கி.மீற்றரால் குறையும். உபகண்டத்தைப் பொறுத்தமட்டில் தூத்துக்குடிக்கு இணையாக இன்னொரு துறைமுகத்தைப் பாவிக்கலாம்.

தென்னிந்தியாவை ஒரு துறைமுக மையமாக உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.

கொழும்புத் துறைமுகத்திற்கும் இதேயளவு அனுகூலங்கள் உண்டு. எனினும், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்கும்.

காங்கேசன்துறை கொழும்பு கடற்போக்குவரத்து நேரம் அரைவாசியாகக் குறையும்.

### கடற்போக்குவரத்து பிரதிகூலங்கள்

தூத்துக்குடி துறைமுகத்தின் தூரம் 1-50 கி.மீற்றரால் குறைக்கப்படுவதால் கப்பல்களின் வேகம் மட்டுப்படுத்தப்பட வேண்டி வரலாம்.

கால்வாயை முழுமையாகப் பயன்படுத்துவதனால் 12.8 மீற்றர் நீளம் (கால்வாயை 14 மீற்றர் ஆழமாக்குவதாயின்) நினைத்துப் பார்க்க முடியாத மூலதனப் பராமரிப்புச் செலவு ஏற்படும். மன்னார் குடாவிலிருந்து வங்காள விரிகுடாவரை. எனவே, இந்தச் செலவினம் துல்லியமாகக் கணக்கிடப்பட வேண்டும்.

எணணெய்க் கசிவுக்கு எதிராகவும் போராட முதலீடு செய்யவேண்டும். இது இப்போது எமது துறைமுகங்களில் உதட்டளவிலுள்ளது. எண்ணெய்க் கசிவுக்கெதிராகத் தொடர்ந்து போராட வேண்டிய நிலையேற்படும்.

சில இடங்களில் எதிர்மறையான கருத்துக்களும் தோன்றியுள்ளன. பிரதான கிழக்கு, மேற்குக் கடற்கரையான ஏடன் சிங்கப்பூர் வழியாகப் பிரயாணம் செய்யும் கப்பல்கள் சேது சமுத்திரக் கால்வாயூடாகப் பிரயாணம் செய்வதற்கு வாய்ப்பேயில்லை.

### தெற்காசிய துறைமுக மையம்

**கொழும்பு**

நன்கு ஸ்தாபிக்கப்பட்டது.

15 மீ.கப்பல் தரிக்கக்கூடியது; அதிகரிக்கப்படுகிறது.

பிரதான பாதைக்கு அண்மையிலுள்ளது.

அதிக சக்தி வல்லமை தேவை. மேலும் முன்னேறுவதற்கு தொழில் இரகசியங்களை அறிந்திருக்க வேண்டும் முதலீட்டாளர்களைக் கவர்வதற்கு. தெற்குத்துறை முகத்தையும் காண்பிக்கத் தயாராயிருத்தல் வேணடும். கப்பல்களை இயக்குவோர் தெற்காசியாவுக்கு வெளியே பார்க்காத சர்ந்தர்ப்பத்தில்.

### தென்னிந்தியத் துறைமுகம்

சிறிய கப்பல்களுக்கு ஏற்றது.

11-12 மீ.கப்பல் தரிக்கக்கூடியது. அதிகரிக்கப்படுகிறது.

பாரிய பராமரிப்பை எதிர்நோக்கும் அதே வேளை, ஆழத்தை மிக விரைவாக அதிகரிக்க வேண்டும்.

கொழும்புத் துறைமுகத்திற்குப் பதிலீடாக அமைவதாயின் கப்பல் தரிக்குமிடத்தின் விஸ்தீரணத்தை அதிகரிக்கவேண்டும். தற்போது குறைந்தளவு திறனேயுள்ளது.

ஒரு பாரிய தேவை உள்ளது. உற்பத்தியாளர்களையும் முதலீட்டாளர்களையும் கவர்வதற்கு.

### நடைமுறைப்படுத்தக் கூடிய விடயங்கள்

இந்த உருவாகக்கூடிய கால்வாய் தெற்காசியாவில் ஒரு கடல் மையம்.

நடைமுறைச் செலவுகளும் சூழல் பாதுகாப்புச் செலவுகளும் பயணம் செய்யும் கப்பலகாரர்களிடம் அறவிடப்படுமா என்பது பற்றி இதுவரை தெளிவாகவில்லை.

தென்னிந்தியத் துறைமுகம் பாரிய கப்பல் போக்குவரத்துக்காகச் சுயமாக அபிவிருத்தி செய்யப்படுமானால் கொழும்புத் துறைமுகத்தினூடான போக்குவரத்திலும் சார்ந்திருக்க வேண்டிய நிலையேற்படும்.

இந்தியத் துறைமுகங்கள் சர்வதேச சந்தையைக் கைப்பற்றுவதில் கொழும்புத் துறைமுகத்திற்குப் பதிலீடாக வருவதற்கு நீண்ட தூரம் பயணிக்கவேண்டும்.

### தீர்மானங்கள்

சேதுகால்வாய் சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் திட்டம் தீட்டப்பட வேண்டும்.

**தொகுப்பு:**
**ந.பரமேஸ்வரன்**

இதனை நடைமுறைப்படுத்த பொருளாதாரரதியில் எழக்கூடிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டும்.

பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக இந்தியா பொருளாதார விடயத்திலும் தலையிடலாம்.

இந்தியாவும் இலங்கையும் இணைந்து பெரிதும் பயனளிக்கக்கூடிய திட்டத்தைத தயாரிக்க வேண்டும். சூழல் பாதுகாப்பிற்காக இலங்கையின் அக்கறை ஊடகங்களின் அடிப்படையிலான பிரசாரமாகத்தான் இருந்து வருகிறது. இந்தியாவுடன் இணைந்து கலந்துரையாடுவது சூழல் பாதுகாப்புத் தொடர்பான பலமான ஒரு குரலாக ஒலிக்கும்.

இதில் நாங்கள் அக்கறையாக இருந்தால் இதன் உட்புறத்தில் தாக்கத்தை ஏற்படுத்த நாம் முயற்சிக்கவேண்டும். யாழ்ப்பாணக் கடற்பரப்பில் (நீர் மட்டத்தில்) எதுவித மாற்றமும் ஏற்படாது.

### ஒத்துழைத்தால்

இந்தியாவுடன் நாங்கள் ஒத்துழைத்தால் இரு நாடுகளின் பக்கமும் ஏற்படவுள்ள நீண்ட கால அழிவுகளை குறைத்துக்கொள்ளலாம்.

கால்வாய் பாவிக்கப்படும் பட்சத்தில் இலங்கைத் துறைமுகங்கள் பாவனைக்குத் கோரப்பட்டால் கொழும்பு - காங்கேசன்துறை இரு துறைமுகங்களும் சமமான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும். ☆






சமகால அரசியல் நிலைவரம் பற்றிய கருத்தரங்கு ஒன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த புதனன்று மாலை நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.கா.ஈழவேந்தன், கி.சிவனேசன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)*

## தவக்காலத்தை முன்னிட்டு திருச்சிலுவைப் பாதை

நெடுந்தீவு, மார்ச்21

நெடுந்தீவுப் பங்கின் தவக்கால சிறப்பு திருச்சிலுவைப் பாதை தியானம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சிறப்புடன் நடைபெற்றது.

மாவட்ட வைத்தியசாலையில் அமைந்துள்ள அன்னை வேளாங் கன்னி சிற்றாலயத்திலிருந்து ஆரம்பமாகி செபநாயகபுர வியாகுல அன்னை கெபியில் நிறைவடைந்த இத் திருச்சிலுவைப் பாதை தியானத்தில் பெருமளவு கத்தோலிக்க மக்கள் கலந்து கொண்டனர்.

இச் சிலுவைப்பாதை நிகழ்வுகளுக்கான வழிபாட்டு ஒழுங்குளை நெடுந் தீவு பங்குத் தந்தை அருட்.திரு.அன்ரனிபாலா மேற்கொண்டிருந்தார்.


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் குமாரசாமி திருக்குமரன்

(வ.பி.போ.சபை பொறிவலர்)



*பண்பின் சிகரமே பாசத்தின் உறைவிடமே ! குமரா!!*
*இனிய உமது முகம் காண ஒரு முறை வரமாட்டாயா?*
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (21-03-2005)திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளு மாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.
(43299)(46-17)

தாய், தந்தை,
சகோதரர்கள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 17 - 05 - 1954



மறைவு 19 - 02 - 2005

### கருணைவேல் தேவநாயகி

திதி: 19-03-2005

*மாதம் ஒன்று அவசரமாய் கடந்தாலும்*
*மாண்டிட்டீர் என்று சொல்ல மனசு மறுக்குதம்மா*
*யோசிக்க யோசிக்க நிமிசம் கடந்தாலும் -உம்*
*சிரித்த முகத்தோற்றம் எம் நெஞ்சகத்தைக் கடக்காது.*

கணவர்: கருணைவேல்
பிள்ளைகள்: அரும்செல்வி ,சந்திரிக்கா, ஜனகன்
(அருண்சோ மில் உரிமையாளர்).

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
(43261)(46-17)



## பணிநிலைக்கான வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் தன்வரலாறடங்கிய (சுயவிவரம்) வேண்டுகைகளை 28.03.2005 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

✪ பணிநிலைகள்:
1) ஆளுகை அலுவலர்
2) எழுதுநர்
3) கணக்குப் பதிவாளர்
4) கணக்காய்வாளர்
5) கணனித் தரவுப் பதியுநர்
6) சிற்றூழியர்

✪ கல்வித்தகைமைகள்:

பணிநிலை: 01, 02 } க.பொ.த. (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

பணிநிலை: 03, 04 } க.பொ.த. (உ/த) தரத்தில் வணிகப் பிரிவில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் தேர்ச்சிய டைந்திருத்தல் வேண்டும்.

பணிநிலை:05- க.பொ.த. (சா/த) தேர்வில் தேறியிருத்தல் வேண்டும். அத்துடன், ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனமொன்றில் கணனித் தேர்வில் தேறியிருத் தல் வேண்டும்.

பணிநிலை: 06- ஆண்டு 8 கல்வி கற்றிருப்பதுடன், பணிப்பட்டறிவும் இருத்தல் வேண்டும்.

✪ வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:

பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

✪ நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்: 02.04.2005 காலை 10.00மணி.

✪ நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

குறிப்பு: 01. நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், ஏனைய சான்றிதழ்கள், அடையாள அட்டை ஆகியவற்றின் படிகளுடன் வருகை தருக.
02. பணிநிலை வேண்டுகையில் பணிநிலைகளைக் குறிப்பிட்டு அனுப்புக.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி.


## நெடுந்தீவுப் பிரதேச விவசாயிகளுக்கு மானியம்

நெடுந்தீவு,மார்ச்21

சமுர்த்தி விவசாய அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு விதை பொருள்களுக்கென மானிய அடிப் படையிலான நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சமுர்த்தி செயலணி கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் விவசாய உற்பத்தி களை மேற்கொள்ளக்கூடிய 12குடும்பங் களுக்கு முதற்கட்டமாக இம்மானிய அடிப் படையிலான நிதி உதவி வழங்கப்பட்டது. (த-112)

## மீன் கழிவுகளால் துர்நாற்றம்

நெடுந்தீவு,மார்ச்21

நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் தங்கி நின்று தொழில்புரிந்துவரும் யாழ்ப்பாணம், குருநகர்ப் பகுதி மீனவர்கள் மீன் கழிவுகளை அங்கேயே அகற்றிவருகின்றனர்.

இந்த மீன்கழிவுகள் கடல் நீருக்குள் அமிழ்ந்து சில நாள்களின் பிற்பாடு துர்நாற்றம் வீசு வதனால் அத்துறைமுகப் பகுதியூடாகப் பயணம் செய்யும் பயணிகள் பெரும் அசௌகரியங் களைச் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

அத்துடன், இத்துறைமுகப் பகுதி ஊடா கவே வியாபாரத்திற்கான மீன்களும் எடுத்துச் செல்லப்படுகின்றன. (த-112)

## நீதிமன்றக் கட்டடம் நிறுவ ஏற்பாடு

தென்மராட்சி,மார்ச்21

சாவகச்சேரியில் 500மில்லியன் ரூபா செலவில் நீதிமன்றக் கட்டடம் அமைக்க முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கட்டடம் அமைப்பதற்கான முன்மொழி வினை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவா சன் யாழ்.அரச அதிபருக்கு அனுப்பிவைத் துள்ளார். (எ-117)

## பாதாள உலக நபர் பொலீஸாரால் சுட்டுக்கொலை

கொழும்பு,மார்ச்21

பொலீஸார் மீது தாக்குதல் நடத்த முற்பட் டார் என்று கூறப்படும் பாதாள உலக சந்தேக நபர் ஒருவர் பொலீஸாரால் கையில் விலங் கிடப்பட்ட நிலையில் கடந்தடி வெள்ளியன்று ஜாஎலவில் வைத்துச சுட்டுக்கொல்லப்பட்டார்.

நீண்டகாலமாக பொலீஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்து வந்த சமன் என்று அழைக்கப்படும் பாதாள உலக நபர் வென்னப்புவ பகுதியில் மறைந்திருக்கிறார் என்று தமக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்து அங்கு சென்ற தாம் அவரைக் கைது செய்தனர் என்று பொலீஸார் கூறினர்.

மேற்படி நபரிடம் மேற்கொண்ட தீவிர விசாரணையின் பின்னர் ஜாஎல - துடல்ல என்ற இடத்தில் அவரால் மறைத்து வைத்திருந்த ஆயுதங்கள் தம்மால் மீட்கப்பட்டன என்றும் அவர்கள் கூறினர்

எதிர்பாராத விதத்தில் சந்தேகநபர் கிரனேட ஒன்றை பொலீஸார் மீது வீசமுற்பட்டார் எனவும்-

உடனடியாக பொலீஸார் அந்த நபரைச் சுட்டுக்கொன்றனர் எனவும்-

பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜாஎல, ராகம, வென்னப்புவ போன்ற பகுதி களில் கொலை, கொள்ளைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர் என்று கூறப்படும் இவர் நீண்ட காலமாகப் பொலீஸாரால் தேடப்பட்டு வந்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ராகம பகுதி யில் சுட்டுக்கொல்லப்பட்ட பாதாள உலகத் தலை வரின் பிரதான சகாவாக இவர் செயற்பட்டு வந்தார் என்கின்றனர் பொலீஸார்.

(த-க).


## ROSA BUS விற்பனைக்கு

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள 29ஸ்ரீ XXXX தொடர் இலக்கமுடைய (751றூட்பாஸுடன்) ROSA BUS விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
M. கிருபானந்தன்,
அல்வாய் வடமேற்கு,
அல்வாய், திக்கம்.
T.P.: 077 6589434 (43304)(46-17)



## 45ஆவது நாள் நினைவு அஞ்சலி

எமது பாடசாலையில் தரம் 2இல் கல்வி கற்றுக்கொண்டு இருந்த துடிப்புள்ள மாணவி

பானுஜா மகேந்திரராஜா

அவர்கள் 05-02-2005இல் அகால மரணமானதை இட்டு, ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(43286)(46-17)

யா/தாவடி இ.த.க.பாடசாலை,
அதிபர், ஆசிரியர்கள்.



ஓம்
ஸ்ரீராம ஜெயம்

### யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

ஏகாதசி உற்சவம் 21-03-2005

நிகழும் தாரண வருடம் பங்குனி மாதம் 8ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 5.15 மணிக்கு ஏகாதசி உற்சவம் நடைபெறும்.


அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றி ஸ்ரீமத் நாராயணன் அருள்பெற்று, ஸ்ரீ மகாலஷ்மி விலாச சம்பன்னராகி வாழ்வீர்களாக.

(சி-40737) (46-17)

அறங்காவலர் சபை.



Mercury™
Empowering your PC




Motherboard Supports

Intel: Prescott/HT, P4, Celeron
AMD: Duron, Athlon, Sempron

சிறப்பு தொழில்நுட்பங்கள்
- FSB 400/533/800 MHZ
- DDR 400MHz max - 3Gb Support
- 32/64 MB onboard VGA
- 2 MB Flash Bios

மேலதிக தொழில்நுட்பங்கள்
- Intel/VIA/SIS Chipsets
- 6 channel Audio
- SATA / CNR USB Connectors

Dealer inquiries welcome. Tel: 077 213 6712

MICRO PC SYSTEMS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 3225893, 077 312 6712 |
| நெல்லியடி | [illegible] 077 3039536 |
| கிளிநொச்சி | கனனி மையம், யாழ் சாலை. (கந்தசாமி கோவிலருகில்) கிளிநொச்சி. |
| வவுனியா | 73C, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. 024 4568339, 0777308417 |
| கொழும்பு - 06 | 15, அவதி ஒழுங்கை வெள்ளவத்தை 011-4512335, 011-4516564 |
| கொழும்பு - 13 | 82, புதுச் செட்டித் தெரு, கொட்டாஞ்சேனை 011-4613617, 011-4614623 |

CORPORATE OFFICE: No.37, 37th Lane, Wellawatte, Colombo-06. Tel: 0114 510686


## நகரசபை, சாவகச்சேரி

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 07-04-2005 ஆம் திகதி 10.00மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதேதினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

இவ்வேலைகளின் பொருட்டு நிர்மாணப் பயிற்சி நிலை யத்தில் (இக்ராட்) தரம் எம் 9அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூ.ச. | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற்றுடன்) ரூ.ச. |
|---|---|---|
| 01. சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் 60' நீளமான இரண்டு துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் அமைத்தல். | 4,000.00 | 575.00 |

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி, நகரசபை அலுவல கத்தில் 05-04-2005ஆம் திகதி நண்பகல் 12.00மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி **செயலாளர், நகரசபை, சாவகச்சேரி** என்ற முக வரிக்கும், இணைப்பிரதி **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக் கும் 07-04-2005 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும். உறையின் இடது பக்க மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத் தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி.*
18-03-2005.
(C-41587)(46-17)

திருமதி கு.ஆறுமுகம்,
செயலாளர்.
நகரசபை,
சாவகச்சேரி.

# ஐந்தாவது ஆண்டு நிறைவில் ஒரு விண்ணப்பம்

## அமரர் வைத்திலிங்கம் சிற்றம்பலம் நவரெத்தினம்



**( V.S.N )**
(ஸ்தாபகர், ருவிங்கிள் ஸ்ரார், யாழ்ப்பாணம்)

திதி: 21.03.2005

**மண்ணில்**
15-09-1931

**விண்ணில்**
16-03-2000

ஆண்டுகள் ஐந்தும் பறந்தோடிப் போனாலும்
ஆறுதில்லையே எம்மனம் ஆறுதலுமில்லையே
மாண்டுநீர் போனதால் மனமும் வெந்து வேகுதே
மாண்புடன் நாம வாழ வழிசமைத்த தெய்வமே
ஈண்டுமை நினைத்து நாம் இவ்வுலகில் வாழ்கின்றோம்
எங்களை மகிழ்விக்க ஒரு முறை இங்கு வாராயோ?

ருவிங்கிள் ஸ்ரார்,
173, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். T.P.: 2448

(சி-42611) (24-14-18)

அன்பு மனைவி,
மகன் பாலவிநாயகர் (பாலா),
மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் (23-03-2005) மாலை விநியோகிக்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைகோட்டைச் சந்தி. மதுரா, கால்நடைத் தீவன விற்பனை நிலையம், 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட். T.P.: 222 - 3529. (43332)

## வாடகைக்கு

இல.11, நாவலர் வீதி (ஐந்து சந்தி), யாழ்பாணத்தில் 3 பரப்புக் காணியுடன் கடை வாடகைக்குண்டு. தொடர்பு: நேரில் த.சபேசன் (நேரம் காலை 6.00 - 7.00 வரை மதியம் 1.00 - 2.00 வரை). (43321)

## அறைகள் வாடகைக்கு

யாழ்.நகரில் வைத்தீஸ்வராச் சந்தியில் அறைகள் வாடகைக்குண்டு. தனிநபர், அரச அலுவலர்களும் உயர்தர மாணவர்களும் விரும்பத்தக்கது. தொடர்பு: 077 6537326 (சி-41598)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1979ஆம் ஆண்டு, திருவோணம், 4இல் செவ்வாய், கிரகபாவம் 45, U.K.B.Sc. (Hon.) Degree, மேலும் படித்த, U.K.இல் தொழில் புரியும், P.R. உள்ள, அழகிய பெண்ணுக்கு எக்கவுண்டன், டாக்டர், என்ஜினியர் மணமகன் தேவை. இங்கு வந்து திருமணம் செய்வார். தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43271)

## 'சிவஜோதி' நூல் வெளியீட்டு விழா

நல்லூர்,மார்ச்21

யாழ்ப்பாணம் இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் எழுதிய 'சிவஜோதி' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

ஓய்வுபெற்ற அதிபர் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் கலந்துகொள்வார். (த-111)

## சிவயோக சுவாமிகளுக்குத் திருவடி பூஜை

அரியாலை,மார்ச்21

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் பூந்தோட்டத்தில் உள்ள சிவயோக சுவாமிகளின் திருவடிக்கு இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறும். (ஜ-17)

## தையல் கைப்பணிக் கண்காட்சி

நல்லூர்,மார்ச்21

எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தையல் கைப்பணிக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் அன்றைய தினம் காலை 9.30 மணிக்குக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படும்.

மேற்படி கண்காட்சியில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். (த-111)


### யா/வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி பருத்தித்துறை
### பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 03-04-2005 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.00 மணி

பெற்றோர் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

M.ஜெகதேவன், செயலாளர். (சி-41610)(26-14-18) திருமதி S.சண்முகநாதன், தலைவர் (அதிபர்).

# SPOKEN ENGLISH
## SPEAK CLEARLY WITHOUT HESITATION

*அனுமதிக்கு முந்துங்கள்!*

பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும், உயர்கல்வி பயில்வோருக்கும் மற்றும் ஆங்கிலம் பேச விருப்பம் உள்ளவர்களுக்கும், மேலதிக ஆங்கில அறிவைப் பெறவிரும்புவோருக்கும் எமது நிறுவனத்தினால் புதிய முறையில் மெருகூட்டப்பட்ட ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்புகள்.

**வகுப்புகள் ஆரம்பம் – 26.03.2005**

- 100% செய்முறைப் பயிற்சி
- சிறந்த விரிவுரையாளர்களின் மேற்பார்வையில்
- ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனம்
- தொலைக்காட்சி ஊடாகப் பேச்சுப் பயிற்சி
- 3 மாத காலப் பயிற்சி நெறி
- மாணவர்கள் தங்கள் வசதிக்கேற்ப நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம்.

(52)

## LONDON ENGLISH COLLEGE

No, 105, Arasady Road, Jaffna
☎- 021 222 5889, 0777 252180

BCNS No, 229 A, Mitcham Road, Tooting, London SW 17910 U.K.

# பஜாஜ்
## இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்



**Pulsar 180 DTS-i**

- 178.60cc / 143.91cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- DTSI தொழில்நுட்பம் • TRICS தொழில்நுட்பம்
- 5 வேக கியர் அமைப்பு

விலை 178.60cc ரூபா 123,698/-
143.91cc ரூபா 116,827/-



**WIND 125**

- 124.60cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின் மற்றும் K-Tec தொழில்நுட்பத்துடன் கூடியது.
- நியம சவாரி நிலைமையில் லீ.க்கு 80 கி.மீ. தூரம்
- கவர்ச்சியான அமைப்பிலான இருக்கை

விலை ரூபா 95,609/-



**CT100**

- 99.27cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- நியம சவாரி நிலைமையில் லீ.க்கு 101 கி.மீ. தூரம்
- கூடிய எரிபொருள் சிக்கனத்துக்கான ஸ்விட்ச்.

விலை ரூபா 76,518/-



**Discover DTS-i**

- ExhausTEC தொழில்நுட்பம்
- உலகின் முதலாவது DTS-i தொழில்நுட்பம்
- 11.51ps சக்தி வழங்கும் 124.52cc, 4-ஸ்ட்ரோக் என்ஜின்

விலை – தன் இயக்கம் ரூபா. 99,122/-
சாதாரண (கிக்) இயக்கம் ரூபா. 93,600/-



**BOXER AR**

- 99.35cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- சிறந்த வசதியான இரட்டை கிறேட்ல் செஸிஸ்.

விலை ரூபா 69,566/-



**Byk**

- 92cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- எரிபொருள் சேமிப்பு
- MFR ஓட்டோஸ்டீலைப் ஜெட் சேப்பு

விலை ரூபா 62,566/-

2 வருட அல்லது கி.மீ 30,000க்கான தரும்* இலவசமற்ற உத்தரவாதம்

*முதலாவது நாள்திற்கானவருக்கு

பஜாஜ்
இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்

மேற்படி விலைகளில் VAT உள்ளடக்கப்படவில்லை

நீங்கள் விஷேடாங்கத்தையும் விசுவாசத்தையும் தேடிச் செல்லும் பயணத்தின் இறுதியில் காண்பது பஜாஜ் மோட்டார் சைக்கிளைத் தான். நீங்கள் யாராயிருந்தாலும், எங்கிருந்தாலும், உங்களுக்கு இடமற்ற விலையில், பெற்றுக்கொள்ளக் கூடிய இந்த பஜாஜ் மோட்டார் சைக்கிள் மாதிரிகள், வேகமாய் மாறிவரும் உங்கள் வாழ்க்கைப் பாவனைக்கும், நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும், மிகப் பொருத்தமானதென்றால் அது மிகையில்லை.

பஜாஜ் இலங்கையில் சிறந்த மோட்டார் சைக்கிள்களை வழங்கி தனது உயர் தரத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளதுடன், சகல மோட்டார் சைக்கிள் மாதிரிகளும் வெற்றியின் அணிவகுப்பில் முன்னணியில் திகழ்பவையே.

அதுமட்டுமன்றி.. இலங்கையின் தரச்சான்று நிறுவனத்தினால் வழங்கப்படும் ISO 9001:2000 மற்றும் ISO 14001 சான்றிதழ்களைப் பெற்ற, மோட்டார் வாகனத் தயாரிப்பில் உலகின் உயர் மட்டத்தில் திகழ்கின்றதும், உங்கள் நம்பிக்கையை என்றும் வென்றதுமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் சேவை மற்றும் மேலதிக உதிரிப்பாக விற்பனை வலையமைப்பானது என்றும், உங்களுக்கு நிரந்தரச் சேவையாற்றத் தயாராகவுள்ளது. பஜாஜ் இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிளாகத் திகழ்வதன் காரணம் இவையே.

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு -2. தொலைபேசி: 4700600. தொலைநகல்: 4700577, 2687175.
நகர காரியாலயம் 120 மற்றும் 120 A பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.
இணைய தளம்: http://www.dpmco.com மின்னஞ்சல்: info@dpmco.com
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு: 4715050.

mel ads 0503272

# பல்கலைக்கழகப் பாடப்பரப்பினுள் பாலாவின் நூல் கட்டாயம் இணையும்

## வரவேற்புரையில் துணைவேந்தர் நம்பிக்கை



கலாநிதி அன்ரன் பால சிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கின்ற "போரும் சமாதானமும்" என்ற நூல் கட்டாயம் பல்கலைக்கழக மாணவர்களின் பாடப்பரப்பினில் இணையும்.

- இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ். நூல் அறிமுகவிழாவில் வாழ்த்துரை வழங்கிய துணைவேந்தர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச சமூகம் மிகவும் விழிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையிலேயே, சர்வதேச சமூகத்திற்கு எமது போராட்ட நிலைப்பாட்டை மேலும் ஆணித்தரமாக இலக்கிய எழுத்தில் - உத்தம வடிவமாக வழங்கவேண்டிய கடமை எங்களுக்கும் உண்டு.

அந்தவகையிலேயே, கலாநிதியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரும் ஆர்வலருமான அன்ரன் பாலசிங்கம் அதனை நூல் வடிவமாகத் தந்திருக்கிறார்.

தமிழர்கள் ஒவ்வொருவரும் தமது கடமைகளை நன்றாக நிறைவேற்றும் பொழுது எமது போராட்டம் வெற்றியடையும். இன்றைய காலகட்டத்தில் இந்த நூல் வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமானதாகும். 'போரும் சமாதானமும்' இரண்டுமே சம நிலையில் இப்பொழுது இந்த நாட்டிலே நடந்து கொண்டிருக்கின்றன.

சர்வதேச சமூகம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கிறது. சுனாமித் தாக்கத்தில் கூட சொல்லாப் பொருளாக எமது போராட்டத்தின் அர்த்தம் சர்வதேச மக்களின் மனத்திலே பதிந்துள்ளது. இந்த நிலையில், இந்தப் புத்தகம் வெளிவருகின்றமை எமக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இந்தப் புத்தகம் வெளிநாடுகளில் ஏற்கனவே வெளியிடப்பட்டபோதிலும், இலங்கையில் - யாழ்ப்பாணத்திலே - இந்தப் பல்கலைக்கழகத்திலே இப்போது வெளியிடப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியைத்தருகிறது. எமது பல்கலைக்கழகப் பட்டப்படிப்புப் பாடப்பரப்பில் இது நிச்சயமாக இடம்பெறவேண்டியதொரு விடயமாகும்

எமது பேராசிரியர்கள் மத்தியிலும், விரிவுரையாளர்கள் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் சமூகத்தின் மத்தியிலும் இவ்வாறான புத்தகங்கள் வெளிவரவேண்டும். எமது பாரம் பரியங்கள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். அவை இலக்கிய ஏடுகளாக மிளிரவேண்டும். அவை எமது கைகளில் கிடைக்கவேண்டும். எமது விடுதலைப் போர் வெல்லவேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன் - என்றார். (த-7-86-203-204)




**தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் அறிமுகவிழா நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெற்றது.**

**அந்த நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் சிலரின் உரைகளின் சுருக்கம் இங்கு தரப்படுகின்றது. ஏனையோரின் உரைகள் தொடர்ந்துவெளிவரும்.**

# அரசின் பொய்ப் பிரசாரங்களுக்குச் சமாதி; தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஆவணம்!

## 'போரும் சமாதானமும்' நூல் குறித்து கஜேந்திரன் எம்.பி.



யாழ்ப்பாணம்,மார்ச்21

ஸ்ரீலங்கா அரசினால் காலத்துக்குக் காலம் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற பொய்ப் பிரசாரங்களுக்கு 'போரும் சமாதானமும்' நூல் சமாதி கட்டியிருக்கிறது.

அத்துடன், இந்த நூல் தமிழர்களைப் பொறுத்த வரையில் விடுதலைப் போராட்டத்துக்கான சிறந்ததோர் ஆவணமாக மிளிர்கின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன்.

'போரும் சமாதானமும்' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்ரன் பாலசிங்கம் போன்றவர்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வெளிநாட்டு ராஜதந்திரத்தில் தங்களாலான வரையில் எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இருந்தாலும் வெளிநாடுகளில் வாழ்கின்ற சகலருக்கும் எமது போராட்டத்தை நியாயப்படுத்த அது போதுமானதாக இல்லை.

இந்தநிலையில், தேவையினை உணர்ந்து கொண்ட அன்ரன் பாலசிங்கம், தன்னால் முடிந்த வரையில் எமது போராட்டத்தைச் சர்வதேச உலகத்திற்கு வெளிப்படுத்தவும் மக்கள் புரிந்து கொள்ளவும் இந்தப் புத்தகத்தை ஆங்கிலத்தில எழுதிவெளியிட்டிருக்கிறார்.

எமது விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளைச் சரியான முறையில் வெளிப்படுத்தும் நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவரவில்லை என்றே கூறலாம்.

இதற்குமுன் வந்த ஓரிரு நூல்களும் எமது போராட்டத்தை முழுமையாக வெளிப்படுத்துவதாக அமையவில்லை. இந்த நிலையிலேதான் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தினால் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

எமது விடுதலைப் போராட்டத்தினை முழுமையாக உள்ளடக்கியுள்ள இந்நூல், எதிர்காலத்தில் விடுதலையை விரும்புகின்ற எந்தவோர் இனத்தவரும் விரும்பிப்படிக்க கூடிய நூலாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

உலகத்தில் ஜனநாயகம் பேசும் நாடுகளில் கூட அங்கு ஜனநாயகத்தைக் காக்க முடியாது இருக்கின்றது.

இந்த நேரத்திலே, விடுதலைக்காகப் நேரடிக்கொண்டிருக்கின்ற இந்த விடுதலை இயக்கத்துக்குள் ஜனநாயகம் என்பது முன்னணியில் இருப்பதைப் போராளிகளோடும் போராட்டத்தை வழிநடத்துகின்றவர்களோடு நெருங்கிப்பழகுகின்ற போது அதனை நன்றாகப் புரிந்து கொள்ளமுடிகிறது.

உண்மையில் எமது விடுதலைப் போராட்டமென்பது எங்களுடைய தேசியத் தலைவரினால் வித்தியாசமான ஓர் அணுகுமுறையினூடாக வழிநடத்தப்பட்டுக் கொண்டிருகிறது.

இந்தநூலை படித்துப்பார்க்கும் எந்தவொரு மேலை நாட்டுக்காரர்களும் எங்களுடைய விடுதலைப் போராட்டத்தை முழுமையாகப் புரிந்து கொள்வார்கள்.

இதுவரை காலமும் சிங்களப் பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்டுவந்த பொய்யான பிரசாரங்களுக்கு முடிவுகட்டக் கூடிய வகையிலே இந்தநூல் அமைந்துள்ளது எனக் கூறமுடியும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர்களாக இருந்தவர்கள் தங்களுடைய முழு அதிகாரத்தையும் தமிழர் விடுதலைக்கு எதிரான பிரசாரங்களையே மேற்கொண்டனர்.

ஒவ்வொரு நாடாகச் சென்று அந்நாட்டின் ஜனாதிபதிகளைச் சந்தித்து உண்மைக்குப் புறம்பான தகவல்களை எடுத்துக்கூறினர்.

இன்றும் கூட எமது வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் வெளிநாடுகளிலே பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார். தற்போது கூட சுனாமி அனர்த்தப் பாதிப்புக்கு நட்டஈடு கொடுக்கக்கூடாது என வலியுறுத்தும் வகையில் சர் [illegible] தேசச் சமூகத்திடம் விடுதலைப் புலிகளுக்கெ [illegible] பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வ [illegible]

இந்தநிலைமையில், இப்புத்தகம் [illegible] துள்ளமையானது நிச்சயம் பிறமொ [illegible] டையே எமது விடுதலைப் போராட்டம் [illegible] விழிப்புணர்வு ஒன்றை ஏற்படுத்தும் [illegible] உண்மை - என்றார். (த-7-86-20[illegible]

# அரசியல் போராளியின் அனுபவ வெளிப்பாடு, பாலாவின் நூலுக்கு பேராசிரியர் புகழாரம்!



தமிழர் விடுதலைப் போராட்டம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தபோது அதனைத் தனக்கேயுரிய தனித்துவத்துடன் எதிர்கொள்ள வழிவகுத்தவர்களில் அன்ரன் பாலசிங்கம் முக்கியமானவர்.

ஓர் அரசியல் பேராளியாக இருந்து நெருக்கடிகளை எதிர்கொண்ட பாலசிங்கத்தின்அனுபவ வெளிப்பாடாகவே 'போரும் சமாதானமும்' என்ற நூல் வெளிவந்திருக்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் மேற்படி நூல் வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'போரும் சமாதானமும்' என்ற நூல் வாழ்வின் யதார்த்தமாகும். காலத்தின் பதிவை ஆவணப்படுத்தும் நூல். களத்தின் சூழலை சர்வதேச மட்டத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் அறியத்தக்கவகையில் இந்தப் போராட்டத்தினுடைய சந்தர்ப்பங்களை - அனுபவங்களை - முழுமையாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள வடிவமாக இந்நூல் அமைகிறது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தத்துவ ஆசிரியர். அவரது எல்லாப் படைப்புக்களிலும் பகுதிகளிலும் மாக்சீய சிந்தனை என்பது முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. மாக்சீயம் அழிந்துவிட்டது - செத்துவிட்டது - என்று சிந்திக்கின்ற இந்த யதார்த்த சூழலுக்குள் அவருடைய வாழ்வியல் சார்ந்த அணுகுமுறை என்பது இந்த நூலின் வெளிப்பாடாக உள்ளது.

அடக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தினுடைய எண்ணக்கருவை எப்படி ஒழுங்குபடுத்தி விளங்க வைக்கலாம் என கோடிட்டுக் காட்டி முதன்மைப் படுத்தியுள்ள தன்மை, இந்நூலுக்குத் தனித்துவத்தை வழங்கியுள்ளது.

அன்ரன் பாலசிங்கம், பத்திரிகையாளனாக, தத்துவாசிரியராக - யதார்த்தவாதியாக - மாக்ஸியவாதியாக விளங்குவதை இந்நூலினூடாகப் பார்க்கமுடிகிறது.

முழுமையான அரசியல் மார்க்கத்தை அறிந்த, சிறந்த அரசியல் போராளியாக அன்ரன் பாலசிங்கத்தைக் காணமுடிகிறது. அனுபவம், வாழ்க்கை முறைகள், போராட்டத்தின் மீது கொண்டிருந்த பற்றுதல்கள் என்பவற்றின் மூலம் போராட்டத்தின் முழுப் பகுதிகளிலும் முதன்மைபெற்று விளங்குகின்றன. நூலாசிரியர் போராட்டத்தின் இன்னொரு பக்கமாக விளங்குகின்றார்.

நெருக்கடிகள் வருகின்றபோது - பிறழ்வு வருகின்றபோது - சர்வதேசமும் பிராந்தியமும் உள்ளூர்க் கட்சிகளும் வலைவிரித்து உபாயங்கள் வகுக்கின்றபோது - அந்த இடத்தில், சந்தர்ப்பத்தில் - தன்னுடைய தனித்துவமான - இயல்பான - அரசியல் சாதுரியங்களுக்கூடாகவும் அரசியல் நீரோட்டத்திற்கூடாகவும் அந்தச் சந்தர்ப்பத்தை உடைத்து, வெளிப்படுத்தி சர்வதேசத்திற்கு எமது போராட்டத்தின் முதன்மையை ஒழுங்குபடுத்தியதில் பெரும் பங்காற்றியிருக்கின்றார் அன்ரன் பாலசிங்கம்.

### இலகுவான மொழிநடை

1987களில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தபோது - அந்தச் சூழலுக்குள் தேசியத் தலைவர் அவர்களை ராஜீவ் காந்தி சந்திக்கிறார். பின்னர் 72 மணித்தியாலங்களில் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்ட வேளையில், "பிரபாகரனின் முகம் சிவந்தது; கோபம் கனத்தது" என்ற இலகுநடையில் மொழியைக் கையாண்டு வெளிப்படுத்தியிருக்கின்றார் பாலசிங்கம். அந்த நிகழ்வை நாசூக்காக - இரகசியமாக - இலகுவாக - அந்த சூழலில் எப்படி ஆயுதங்களை ஒப்படைப்பது என்று ஒரு குறுகிய நேரத்தில் தலைவரோடு உரையாடி அந்த விடயத்தில் ஓர் இணக்கப்பாட்டை உருவாக்கினார்.

ஏனென்றால் தலைவர் இருக்கின்ற சூழலில் தலைவரை அந்த இடத்தில் இருந்து மீட்டெடுக்க வேண்டிய - விடுதலைப் போராட்டத்தை மீட்டெடுக்க வேண்டிய - தேவை இருந்தது.

அந்தப் பக்கத்தில் - அந்தச் சூழலில் தனக்கேயுரிய தனித்துவமான பாத்திரத்தில் நின்று இந்த விடுதலைப் பேராட்டத்தை அன்ரன பாலசிங்கம் வழிநடத்தியுள்ளார்.

தமிழ் தேசியத்தின் உணர்வு எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது. என்பதை மிகவும் அழகாக ஒழுங்குபடுத்தியுள்ளார். நிராகரிக்கப்பட்ட - மறுக்கப்பட்ட - அல்லது ஒடுக்கப்பட்ட தமிழர்களின் கஷ்டங்களை அவர் இதிலே முன்வைத்துள்ளார். தேசிய விடுதலைப் போராட்டங்களின் கருவூலங்கள் எப்படி வளர்ந்தது என்பதையும் அதனுடைய ஆயுதப் பரிமாற்றங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதையும் - மிகச் சிறப்பாக எங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

சுபாஷ் சந்திரபோசின் தீவிரத்தையும் இந்த விடுதலை அமைப்புப் போராட்டத்தின் தலைமை கொண்டிருக்கின்றது என்பதைத் தன்னுடைய முதலாவது அத்தியாயத்தின் இறுதிப்பகுதியில் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்தியர்களுடைய தனித்துவங்கள் பற்றி அவர் குறிப்பிடுகின்றார். ஒரு வரலாற்றுப் பதிவை மட்டும் அவர் செய்துவிட்டுப் போகின்றார். முதற்பகுதியிலேயே சிறப்பாக இதனை வெளிக்காட்டியுள்ளார்.

### எந்தத் தரப்பையும் விமர்சிக்கவில்லை

ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பினையோ தனிமனிதனையோ அல்லது ஒரு தேசத்தையோ அல்லது இந்திய வல்லாதிக்கத்தையோ சர்வதேச வல்லாதிக்கத்தையோ எந்த வல்லாதிக்கத்தையும் இந்த நூலில் ஒரு சந்தர்ப்பத்திலும் விமர்சிக்கவில்லை; விவாதிக்கவில்லை.

நான் வரலாறு ரீதியாக வாசித்த ஏனைய புத்தகங்களில், யதார்த்தத்தில் இருக்கின்ற தமிழ்த் தலைமைகள் என்றாலும் சரி சிங்களத் தலைமைகள் என்றாலும் சரி அல்லது பொதுவாகவே இந்தப் பிராந்திய சர்வதேசங்கள் என்றாலும் சரி அவைகளை நிராகரிக்கின்ற ஒரு தன்மை உண்டு. ஆனால், இவருடைய இந்த நூலில் அத்தகைய தன்மை காணப்படவில்லை. இது ஒரு சிறப்பம்சமாகும்.

இதிலே, தேசியத் தலைவர் பிரபாகரன், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா ஆகியோரின வாழ்க்கை வரலாறுகள் கூறப்பட்டிருக்கின்றன. பிரேமதாஸா எங்களுடைய எதிரியாக இருக்கலாம - எமது இனத்துக்கு எதிரானவராக இருக்கலாம் - ஆனால், வரலாற்றில் அவருடைய பக்கங்களை நாம் எப்படிப் பார்க்கவேண்டும் என்பதை அன்ரன பாலசிங்கம் தெளிவாக விளக்கியிருக்கின்றார்.

எந்தவொரு தேசிய இனத்தையோ, எந்தவொரு தேசிய இனத்தின் தலைமையையோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் சுட்டவோ - நிராகிக்கவோ - ஏசித்தீர்க்கவோ - முயலவில்லை.

தமிழ்த்தேசிய இனத்தினுடைய பரிமாணத்தை இன்றுவரை எவ்வாறு கடைப்பிடித்திருக்கின்றோம் - எங்களுடைய நெருக்கடிகள் எவ்வாறு கையாளப்பட்டிருக்கின்றன - என்ற விடயத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார். தமிழ்த தேசிய விடுதலைப் போராட்டத்தின் போக்கை நிர்ணயிப்பதில் கணிசமான பங்கை இந்த நூல் வகிக்கும். ஆங்கிலம் தெரிந்தவர்கள் வாழ்கின்ற எல்லா நாட்டிலும் இந்தநூல் அச்சிட்டு வெளியிடப்படவேண்டும்.

இதனைத் தமிழில் வெளியிடுவது என்பதைவிட ஆங்கிலத்தில் வெளியிட்டிருப்பதே இன்றைய காலத்தின் தேவை. அப்போதுதான் எமது போராட்ட நியாயங்களைச் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தமுடியும்.

இது ஒரு தனித்துவமான படைப்பு; காலத்தின் தேவைகருதிய படைப்பு. எனவே, ஐரோப்பிய நாடுகள் சகலவற்றிலும் இந்த நூலை வெளியிடுவதற்கு ஏற்பாடுசெய்யவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் பிரமுகர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். - என்றார். (த-7-86-203-204)

# லொறிகள் மோதிச் சாரதிகள் பலி!

கொழும்பு,மார்ச் 21

தம்புள்ளவுக்கு அப்பால் கலேவல பகுதியில் இரண்டு லொறிகள் நேருக்குநேர் மோதிக்கொண்டன. பின்னால் வந்த வான் ஒன்றும் அந்த லொறி ஒன்றுடன் பின்பக்கமாக மோதிச் சேதமடைந்தது.

இந்தச் சம்பவத்தில் லொறிகளின் சாரதிகள் இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். நான்குபேர் படுகாயமுற்றனர். அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து கடந்த 18 ஆம் திகதி காலை ஏழு மணியளவில் இடம்பெற்றது.

ஏறாவூரில் இருந்து கொழும்பு நோக்கிச்சென்ற லொறியும் தம்புள்ளவில் இருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த லொறியுமே கலேவலயில் வைத்து நேருக்குநேர் மோதிக் கொண்டன.

லொறிச் சாரதிகளான எம்.டி.றொஹான் அனுரா, அப்துல்காதர் மொஹமட் ஆகியோரே கொல்லப்பட்டனர். லொறி ஒன்றுக்குப் பின்னால் சென்றுகொண்டிருந்த வானில் பயணம் செய்த மூவரும் லொறியில் பயணித்த சாரதியின் உதவியாளரும் படுகாயமுற்றனர்.

வாகனங்கள் அதிவேகத்தில் சென்றசமயமே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

கலேவல பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## கத்தி வெட்டில் ஒருவர் காயம்!

யாழ்,மார்ச் 21

மானிப்பாய் பகுதியில் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற கத்திவெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இரவு 9:30 மணியளவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் சங்குவேலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த இரத்தினம் சாந்தகுமார் (வயது 42) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். (த-12)


மிருசுவில்-படித்த மகளிர் திட்டம்-துர்க்காபுரம்
அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் தேவஸ்தானம்



மஹா கும்பாபிஷேக விழா

அன்புடையீர்!

தாரண வருஷம் பங்குனி உத்தரம் 12ஆம் நாள் (25.03.2005) வெள்ளிக்கிழமை காலை 9.16 மணி முதல் 10.30 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

23.03.2005:- புதன்கிழமை காலை 6.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகும்.
24.03.2005:- வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு விசேட சாந்தி, யாக பூஜை, பக்தர்கள் எண்ணெய்க் காப்புச்சாத்துதல்.
25.03.2005:- வெள்ளிக்கிழமை முற்பகல் 9.16 மணிக்கு கும்பாபிஷேகம், நண்பகல் 12.30 மணிக்கு மகா அபிஷேகம்.

மாலை வசந்த மண்டபப் பூசையாகி அம்பாள் திருவீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகப் பிரதமகுரு சிவஸ்ரீ க.வீரபத்திரக்குருக்கள் (சாவகச்சேரி)

அம்பிகை அடியார்கள் வந்து தரிசித்து உய்தி பெறுமாறு கேட்கப்படுகின்றனர்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 24ஆம் 25ஆம் திகதிகளில் விசேட பஸ் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

(43235)(52-14-18) ஆதீனதர்மகர்த்தா.



உ
சிவமயம்

குரு பூஜையும் தியான மண்டபத் திறப்பு விழாவும்



வதிரி, கரவெட்டி ஸ்ரீபரமானந்த ஆச்சிரம நிறுவுநர் ஸ்ரீபரமானந்தசுவாமி அவர்களது 10ஆவது ஆண்டு குருபூஜை தினமும், நிறுவுநர் நினைவாக தியான மண்டபத்திறப்பு விழாவும் நடைபெறும்.

காலம்:
நாளை (22.03.2005) செவ்வாய்க்கிழமை
நேரம்:
காலை 11.00 மணி
தலைமை:
டாக்டர் M.யோகிஸ்வரதேவன்
(உப தலைவர்)
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம
சுவாமி சித்ரூபானந்தா அவர்களால்
தியான மண்டபம் திறந்து வைக்கப்படும்.

நினைவுப் பேருரைகளும், சிறப்புச்சொற்பொழிவுகளும், இல்லச்சிறார்களின் சிறப்பு நிகழ்ச்சிகளும், அதனைத் தொடர்ந்து மகேஸ்வரபூஜையும் நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீபரமானந்த ஆச்சிரமம், வதிரி, கரவெட்டி.

தலைவர், செயலாளர், ஸ்ரீபரமானந்த சிறார், முதியோர் இல்ல ஆச்சிரம தர்மகர்த்தாக்கள் சபை.

(சி.41614) (39-18)



வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!
20.02.2005 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

செல்லையா செல்வராசா

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அவரது இல்லத்தில் 22.03.2005 செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மடத்தடி, அல்வாய் கிழக்கு, அல்வாய். (சி.41617) (39-18) - மனைவி, பிள்ளைகள்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 663 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 18-3-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5314925 - 5330787 |

லக்கினம் துலாம்

வெற்றி இலக்கங்கள்

**05 23 29 37**

ஜக்பொட் பரிசு ரூபா.17,80,950/- வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 25,65,900/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,51,663 | 10/- | 35,16,630/- |
| 2.இலக்கங்கள் | 32,211 | 20/- | 6,44,220/- |
| 1.இல + லக்கினம் | 31,825 | 30/- | 9,54,750/- |
| 2.இல + லக்கினம் | 2,966 | 100/- | 2,96,600/- |
| 3.இலக்கங்கள் | 870 | 500/- | 4,35,000/- |
| 3.இல + லக்கினம் | 79 | 5,000/- | 3,95,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 17,80,950/- | - |
| மொத்தம் | 4,19,624 | - | 77,94,450/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 77,94,450/-

தொடர் இல. 4365316 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5316153-4-37
5328105-0-00
5319038-5-29
5329309-5-74
5315024-7-93

## 19.03.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300145019 இலிருந்து 300163386 வரை

சீட்டிழுப்பு இல. 1591

**13 36 38 66** சுப்பர் எண் **09**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.20,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 20,00,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 42 | 5,000/- | 2,10,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 479 | 1,000/- | 4,79,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,595 | 500/- | 7,97,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,801 | 40/- | 9,52,040/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,429 | 20/- | 4,48,580/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,38,647 | 10/- | 33,86,470/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரு.87,73,590/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 29,04,600/-

தொடர் இல. 200171900 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 23 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறிமை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

300154161-6-92
300154604-8-03
300151937-0-29
300154899-8-56
300156219-2-64

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
உப அதிபர்
**திரு.அம்பலவாணர் இரத்தினசிங்கம்**
அவர்கள்

37 வருடங்கள் கல்வி உலகில் பணிபுரிந்த இவர் எமது பாடசாலையில் 20 வருட சேவையில் 9 வருடங்கள் உப அதிபராகச் சிறப்பாகச் சேவையாற்றி அளப்பரிய பணிகள் செய்துள்ளார். அகவை அறுபதில் இன்று (21.03.2005) திங்கட்கிழமை முதல் ஓய்வுபெற்று மணிவிழாக்காணும் அவர்களைப் பல்லாண்டுகாலம் வாழ்க வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவர்கள்.

(சி 41620)(24-11-17-30)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 16 - 04 - 1962



ஆண்டவன் அடியில் 19 - 02 - 2005

**அமரர் சிவசங்கரன் கணேசராஜா (கணேஸ்)**

(உரிமையாளர், கணேசன் களஞ்சியம், திருநெல்வேலி
கணேசன் ரேடர்ஸ், கொழும்பு)


*உனைப் பிரிந்து ஒரு மாதம் சென்றால் என்ன, எத்தனை மாதங்கள் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம்முடனே!*

இன்று (21.03.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். எமக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கும் எமது நன்றி.

*7, மதவடி ஒழுங்கை,*
*திருநெல்வேலி.* (43330)(11-17-30)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

# 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



விடுதலைப் போராளி
**செல்வன் தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா**
(லெப்டினன்ட் சிறைவாசன் "சிறை")

*தாயின் மடியில்*
*24.11.1967*

*தாயக மண்ணில்*
*21.03.1989*

மல்லாகம். (C/41594)(51-18-46) -குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அரியரட்ணம் சிவகுலரட்ணம்

*(பாதுகாப்பு சார்ஜன் இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)*



சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட அரியரட்ணம் சிவகுலரட்ணம் நேற்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் அரியரட்ணம் - மங்கையர்க்கரசி ஆகியோரின் அருமைப் புதல்வனும் மாவடி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைப்பாறிய ஓவசியர் பாலசுப்பிரமணியம் - மனோரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மருமகனும் ஜெயந்தா அவர்களின் அன்புக் கணவரும் செந்தூரன் (பழைய மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி), செந்தில்குமாரி (யாழ்ப்பாணக் கல்லூரி A/L 2006 கலைப்பிரிவு), கேதீஸ்வரன் (யாழ்ப்பாணக் கல்லூரி, தரம் 10) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவயோகரட்ணம் அவர்களின் அன்புச் சகோதரனும் பரஞ்சோதி, சாந்தா (ஆஸ்திரேலியா), ஜெயப்பிரகாஷ் (சுவிஸ்), சுஜாத்தா (ஜேர்மனி), சுவர்ணகுமாரி (கொழும்பு), அமுனா (ஜேர்மனி), கல்பனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 21.03.2005 காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நவாலி வழுக்கியாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மூளாய் வீதி,*
*மாவடி, வட்டுக்கோட்டை.* (சி 41523)(24-11-17-30)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


## உடன் தேவை

பார்த்தி ஹோட்டலுக்கு ரொட்டி மேக்கர் உடன் தேவை.
தொடர்பு:- இல. 666, K. K. S. வீதி,
(433330) யாழ்ப்பாணம். T.P: 077- 6669960

## THE ROYAL COLLEGE OF JAFFNA

கட்டணம் 1000/- வுடன் 6 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கலாம்.
By:- விக்னேஸ்வரன்ஆச்சாரி,
426, (302) K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (43342)

## திருமணக் கார்

குளிரூட்டப்பட்ட கார் திருமணத் தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0777 - 747095
0776 - 258204
(சி-41585)(11-45)

## லஷ்சுமி சினிமா இணுவில்

ரவி, அஸின், நதியா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த
M.குமரன் (சீரஸ்)
சன் ஒவ் மகாலக்சுமி
காட்சி நேரம்: 11.00. 3.00. 7.00.
(43250)(29-16-17)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00 2.45. 6.00. பு.நே.)
TITANIC
(டைட்டானிக் தமிழாக்கம்)
23. 03. 2005 முதல் கால் இருவேடர்.
மனிஷா கொய்ராலா நடித்த
ஆளவந்தான்

## நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
கா.நேரம். 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே) மட்டும்
The Passion of the Christ
(இயேசு நாதரின் இறுதி 12 மணி நேரக் கதை) (C/41486) (22-11-45)

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
லண்டன் (சீல்ஸ்)
இயக்கம்: சுந்தர் C
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(C/41881)(29-16-17)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

சிறப்புத் தோற்றத்தில் விஜய்,
ரவிகிருஷ்ணா, நமிதா, ரம்பா நடித்த
சுக்ரன் (சீல்ஸ்)
தினசரி 11.00. 3.00. 7.00 (பு.நே)
(C/41380)(29-16-17)

## மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்த
மாயாவி (சீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
(C/41378)(29-16-17)

## WALK IN INTERVIEW

Computer Hardware Technicians
*முன் அனுபவம் உள்ளவர்கள் 22. 03. 2005 மாலை 3.00 மணிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.*
Director.
**NORTH EAST TECHNOLOGIES (PVT) LTD**
No.34, SADDANATHAR ROAD,
NALLUR, JAFFNA.
T.P.: 021 222 3786 / 0777 708498
(C/41621) (24-11-17-30)


# மரண அறிவித்தல்

## சின்னத்துரை நவரட்ணம்

(சுந்தரமூர்த்தி)



கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் தேவரையாளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நவரட்ணம் (சுந்தரமூர்த்தி) அவர்கள் நேற்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவரையாளி,*
*அல்வாய்.* (சி 41626)(24-11-17-30)

தகவல்:
கும்பத்தினர்.

# மறைவு முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 21 - 02 - 1988

மறைவு 02 - 03 - 2004

**செல்வன் சுபாஸ்சந்திரபோஸ் சிந்தூர்ஜன்**

*(யா/திருநாவுக்கரசு ம.வி., யா/ஸ்ரீலங்கா வித்தியாலய மாணவனும், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணி உறுப்பினரும்)*

எங்கள் குடும்பத்தின் குட்டிச்சூரியனே!
ஒளியிழந்து தவிக்கும் எங்கள் வாழ்வில்
உன் நினைவுகள் தானே வானத்துப் பௌர்ணமி
அன்பான அப்பாவுக்கு வலக்கையாய் நீயிருந்தாய்
பாசமிகு அம்மாவுக்கும் பலமாக உதவி செய்வாய்
ஆண்பிள்ளை நீயென்று ஆராபித்து நாமிருந்தோம்
ஆனாலும் விதியொன்று பதினாறில் காத்திருந்ததை யாரறிவோம்.
அந்திமத்துப் புஸ்பமாக அர்ப்பணமாய் நீ சென்றாலும்
அன்றுதொட்டு இன்றுவரை கதறிக் கலங்குகிறார்கள்
உன் உடன்பிறப்புக்களும் உறவுகளும்
ஆண்டு ஒன்று என்ன? அடுத்தடுத்துப் பல நகர்ந்தாலும்...
எங்கள் அன்புச் செல்வமே! நீங்குமா உன் நினைவு எம்மைவிட்டு?

*அல்வாய் வடக்கு, அல்வாய்.*
*நி.முகவரி: கச்சாய் வீதி, கொடிகாமம்.* - குடும்பத்தினர்.
(43303)(01-17-30)

# நீங்கா நினைவில் நான்கு ஆண்டுகள்

மகிழ்வில் 23 - 06 - 1980



துயரில் 21 - 03 - 2001

**அமரர் செல்வரட்ணம் சுதர்சன் (சுதன்)**

பெயரிட்டு நாம் பெருமைப்படுமுன்
எமைக் கதறவிட்டுப் பறந்ததேனோ?
நாலாண்டென்ன நாமுள்ளவரை
நமது துயர் மாளவே மாளாது

*"சுதன் அகம்"*
*விக்னேஸ்வரா வீதி,*
*நிற்சாமம் - சங்கானை.*

பிரிவால் வாடும்:
அப்பா, மம்மி,
சகோதரர்கள்: உமா, சர்மி, சுகி, நிது.
(43333)(01-17-30)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 15.05.1999 இறப்பு 05.02.2005

**செல்வி மகேந்திரராஜா வானுஜா (நிவா)**

சின்னஞ்சிறு வயதில் துடிப்புள்ள சிறுமி நீ என்றுமே மலர்ந்தமுகம் இன்றுதான் வாடியதோ எம் உறவுக்கிளையில் இருந்து உதிர்ந்துவிட்ட உயிர்ப்பூவே! உதயமாகிநின்று கார்மேகம் கண்திறக்கும் நேரத்தில் மோட்டார் வாகனம் உன் உயிரைப் பறித்ததோ ஊரோடு உறவு கலந்து நாமெல்லாம் இங்கிருக்கத் தனியாகச் சென்றாயோ?

இன்று (21.03.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்வதோடு, ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S. வீதி, நந்தாவில், தாவடி.

தகவல்
குடும்பத்தினர்.
(43297) (54-18-46)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா பொன்னம்மா



கட்டுவன், கந்தன் கருணையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பொன்னம்மா அவர்கள் 18.03.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை கந்தையா (திருகோணமலை, பன்குளம், பிரபல வர்த்தகர், சமாதான நீதிவான்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொனனம்பலம், திருநாவுக்கரசு, சின்னாச்சிப்பிள்ளை, பண்டிதர் நடராசா, கனகரத்தினம் (கனடா), சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கதிரைமலை (கனடா), அருந்தவநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன் (கனடா), அசோகமாலா (லண்டன்) ஆகியோரின் மாமியும் கண்மணி, சந்திரா மனோன்மணிதேவி, இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் பிரியா, உதயா, சர்மி, துளசி, கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி தெற்கு, "கந்தன் கருணை" இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"கந்தன் கருணை"*
*பருத்தித்துறை வீதி,*
*நீர்வேலி தெற்கு, நீர்வேலி.*
*T.P.: 060 2213443*

தகவல்:
தம்பிமுத்து சோதிலிங்கம்
(சமாதான நீதிவான்),
அருந்தவநாதன் அசோகமாலா (லண்டன்).
(43341)(24-11-17-30)

# முரளிதரன் - மதிமலர் திருமணம் சென்னையில் இன்று நடக்கிறது



இலங்கையின் கிரிக்கெட் அணியின்சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் (வயது -33) சென்னை மலர் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மதிமலர் (வயது-24) திருமணம் சென்னையில் இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது. எழும்பூர் ராணி மெய்யம்மை திருமண மண்டபத்தில் காலை 9 மணியளவில் நடைபெறும் திருமண நிகழ்ச்சியில் இலங்கை மற்றும் சர்வதேச கிரிக்கெட் வீரர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-க-190)

# அரச கட்டுப்பாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டுள்ளது.

கருணாவின் முக்கிய சகாவான மங்களம் மாஸ்டர் என்பவர் தலைமையில் இந்த முகாம் இயங்கிவருகின்றது என்கின்றன படை வட்டாரங்கள். கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம்திகதி விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மா'வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் மங்களம் மாஸ்டருக்குத் தொடர்புகள் இருந்தன என்று குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

கருணா குழுவினரின் இந்த முகாமுக்கு வெளியே அவர்களின் 60உறுப்பினர்கள் செயற்பட்டு வருகிறார்கள் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். சிறுவர்களும் அந்தக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்தினர்.

இந்தத் தகவல்களை நேற்று வெளியிட்ட கொழும்பில் இருந்து வெளியாகும் 'சண்டே லீடர்' பத்திரிகை, தனது செய்தியாளர் அந்தக் கிராமத்துக்குக் கடந்த வாரம் சென்றிருந்த சமயம் சுமார் 12வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் ஆயுதங்களுடன் சென்றதைக் கண்டார் என்று செய்தி வெளியிட்டுள்ளது.

78 தமிழ்க் குடும்பங்கள் வசிக்கும் பாரம்பரிய தமிழ்க் கிராமமான தீவுச்சேனையின் நுழைவாயிலில் அமைந்துள்ள காவலரணில் இருக்கும் கருணா குழு உறுப்பினர் சிங்களம் பேசக்கூடியவராக இருந்தார்' என்று 'சண்டே லீடர்' செய்தியாளர் தெரிவித்துள்ளார். நகர்வுக் குழிகளும் பதுங்குழிகளும் அங்கு காணப்படுகின்றன.

கருணாவுடனோ அவரது குழுவினருடனோ தமக்குத் தொடர்பு இல்லை என்று அரசும் இராணுவத்தினரும் திட்டவட்டமாக மறுத்து வந்த நிலையில் தீவுச்சேனையில் கருணா குழுவினர் முகாம் அமைத்துச் செயற்படுவது பற்றிய செய்திகள் முதற்றடவையாக வெளியாகி உள்ளன.

சுமார் 7மாதத்திற்கு முன்பிருந்தே இந்தக் கிராமத்தில் கருணா குழுவினர் செயற்பட்டு வருகின்றனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தீவுச்சேனைக் கிராமத்துக்கு அருகே முஸ்லிம் கிராமம் ஒன்றும் உள்ளது.

இந்தக் கிராமத்தில் அரச படையினரின் பிரசன்னம் எவையும் உத்தியோகபூர்வ ரீதியில் தெரியவில்லை என்று 'சண்டே லீடர்' தெரிவித்தது. கருணா குழுவின் முழுக்கட்டுப்பாட்டிலேயே கிராமம் இருக்கின்றது.

கருணா குழுவினரால் கிராம மக்கள் பெரிதும் துன்புறுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. மக்கள் அச்சத்துடனேயே இருக்கின்றனர். கருணா குழுவினர் மட்டு. - பொலன்னறுவை எல்லைப் பகுதியிலேயே தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை இலக்குவைத்துத் தாக்கியும் வருகின்றனர்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவை வடக்கு - கிழக்குக்கு வெளியே விரட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தீவுச்சேனை முகாமில் கருணா இருக்கிறாரா இல்லையா என்பது பற்றி 'சண்டே லீடர்' கருத்து எதனையும் வெளியிடவில்லை. (எ-க)

## மானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் கே.குணானந்தனுக்கு கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் பீடாதிபதியாகப் பதவி வழங்கி அவரை அங்கு நிரந்தரமாகக் கடமையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எனது கோரிக்கைக்கு இன்னமும் சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

மருத்துவ மாணவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் நியமனம் செய்யப்பட்ட நடவடிக்கைக் குழுவின் சந்திப்புத் திகதி குறித்தும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவரிடம் இருந்து இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை.

மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம், மானியங்கள் ஆணைக்குழு, கிழக்குப் பல்கலைக்கழகம் என நான்கு நிலையினர் சம்பந்தப்பட்டதாக இந்தப் பிரச்சினை உருவெடுத்துள்ளது. இதற்கு விரைவில் உரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று துணைவேந்தர் மோகனதாஸ் உதயனுக்குத் தெரிவித்தார். (எ)

யாழ்.மொபைல்ஸ் வழங்கும் மற்றுமொரு
MOBITEL G.S.M. வெளியீடு
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
கையிருப்பு உள்ள வரை மட்டும்
300 Package
YARL MOBILES (PVT) Ltd.
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி, யாழ்.
Hot Line 071 4168410, 071 4168412, 071 4168424
(சி-41605)(11-17-30)

# தொடர்ச்சியான வேலை நிறுத்தம்

யாழ்.பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர் ஒன்றியத்தினர் இன்றுமுதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட பல்கலைக்கழகப் பதிவாளரை மீண்டும் பதவியில் இணைத்துக்கொள்ள பேரவை மேற்கொண்ட தீர்மானம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனைக் கண்டித்தே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று ஒன்றியம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-13-190)

## பத்திரிகையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பத்திரிகையாளர் சங்கத்தின் நிர்வாகக்குழு முன்வைத்த கருத்துக்களைச் செவிமடுத்த மாவட்ட கட்டளைத் தளபதி, படையினரின் தவறுகள் நிரூபிக்கப்பட்டால் நிச்சயம் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நட வடிக்கை எடுக்கப்படும். ஊடகவியலாளர் தமக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்கும் படைத்தரப்பினரின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும் 512 ஆவது படைப்பி:ரிவைச் சேர்ந்த மேஜர் வனிகசேகரவுடன் எந்நேரமும் தொடர்புகொள்ளலாம். அத்துடன், பத்திரிகையாளர்களை அடையாளம் காணும் விசேட திட்டம் ஒன்றும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்றார். (எ-13)

## ஹெரால்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை அலுவலகத்தைக் கோரியிருந்தது. இதனையடுத்தே மேற்படி குழுவினர் கொழும்பு வருவதற்கு ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த விவகாரம் குறித்து உலக வங்கியின் தலைமையக அதிகாரிகள் சிலர் இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் ஹெரால்ட்டுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர் தொடர்பான செய்தியின் உண்மைத்தன்மை குறித்து வின்வியிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு வரும் உலக வங்கி அதிகாரிகள் குழு, வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

# சுனாமி குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாண மாநகர நூலக சபை நடத்தும் சுனாமி அனர்த்தக் கருத்தரங்கும் சுனாமி அறிவியல் சார் விபரண நூல் அறிமுக நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண பொது நூல்நிலையக் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 'சுனாமி அனர்த்தம்' தொடர்பாக யாழ். பல்கலைக் கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரி.பி.இராஜேஸ்வரனும், 'சுனாமி அரசியல்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக அரசியல்துறை விரிவுரையாளர் கே.ரி.கணேச்லிங்கமும் 'சுனாமி நிவாரணம்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக பொருளியல் துறை தலைவர் பேராசிரியர் பசுபதி சிவநாதனும்.

'சுனாமியும் நானும்' என்னும் பொருளில் கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை பீடாதிபதி பேராசியர் எஸ்.மௌனகுருவும் கருத்துரை நிகழ்த்துவர். சுனாமி அறிவியல்சார் விவரண நூலை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் வெளியிட்டு வைப்பார். தொடர்ந்து சுனாமியின் பின் சமூகம் என்னும் பொருளில் கலந்துரையாடல் நடைபெறும். (கு-204)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டபோது அவர்களில் பெரும்பாலானவர்கள் இது விடயத்தில் கனடா அவசரப்படக்கூடாதென்றே கூறினர். குறிப்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சமாதான முயற்சிகள் நடைபெறும் இந்தச் சூழ்நிலையில் அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாதென்று கூறினர்.

சமஷ்டி முயற்சிகள் குறித்தும் நாம் அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தினோம். இந்தச் சமஷ்டி முறைமை குறித்து ஜே.வி.பியினர் தெளிவற்ற நிலையில் இருப்பது அவர்களுடன் நடத்திய பேச்சின்போது தெரியவந்தது. தெளிவற்றதுபோல் இருக்கிறார்கள் எனக் காட்டிக் கொண்டார்களோ என்பது தெரியவில்லை.

எவ்வாறாக இருந்தாலும் இப்போதைய சூழ்நிலையில் நாட்டின் அபிவிருத்தி குறித்தே ஜே.பி.பி. சிந்திக்கவேண்டும். இதை நாங்கள் அவர்களிடம் வலியுறுத்தியுள்ளோம் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

# விபத்துத் தொடர்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயரதிகாரிகளும் இருந்தனர் என்று செய்திகள் தெரிவித்தன.

இந்த விபத்து இடம்பெற்ற சமயம் இராணுவத் தளபதி நாட்டில் இல்லாத காரணத்தினால் பதில் இராணுவத் தளபதியாகக் கடமையாற்றிக்கொண்டிருந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா விபத்துப்பற்றி விசாரிக்க விசாரணைக்கு ஒன்றை அமைத்தார். விசாரணை அறிக்கையை உடனடியாகத் தரவேண்டும் எனவும் பணிப்புரை விடுத்திருந்தார். விசாரணைக்குழுவின் தலைவராக மேஜர் ஜெனரல் லோரன்ஸ் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார்.

பின்னர், நாடு திரும்பிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட மேற்படி இராணுவ விசாரணைக் குழுவை உடனடியாக மாற்றியமைத்தார். நான்கு சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டனர்.

இராணுவ பிரதிக் கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால விசாரணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். பிரிகேடியர் சந்திரவங்ஸ, கேணல் ருக்மால் டயஸ், கேணல் சமரதுங்க ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

விசாரணைக்குழுவின் அறிக்கையை இம்மாத இறுதிக்குள் வழங்கு மாறும் இராணுவத் தளபதி பணிப்புரை வழங்கியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது. பதில் இராணுவத் தளபதி நியமித்த ஒரு விசாரணைக் குழுவை இராணுவத் தளபதி உடனடியாக மாற்றி அமைத்தமை அவர்களிடையேயான முரண்பாட்டை தெளிவாக வெளிக்காட்டுவதாகச் சுட்டிக்காட்டும் இராணுவ செயலக வட்டாரங்கள், இது உயரதிகாரிகளிடையே மனக்கசப்பை வளர்த்துள்ளதாகவும் கூறின.

இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றபோது அப்போது பதில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவும் அந்த வாகனத்தில் இருந்தார். என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியமையும் அவரால் நியமிக்கப்பட்ட குழு மாற்றப்பட்டதற்கான காரணங்களில் ஒன்று என்று கூறப்படுகின்றது. (எ-க)

SKY COMPUTERS (PVT) LTD
Affiliated with Irish International University (U.K.)
No,89,Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021- 4590325 Fax; 021 - 4590325
MS OFFICE - 3 MONTHS
MS-WORD - 1 MONTH
MS - EXCEL - 1 MONTH
MS - ACCESS - 1 MONTH
MS - POWER POINT- 1 MONTH
Full Payment 2000/=
புதிய பிரிவு ஆரம்பம் 21.03.2005
DESK TOP PUBLISHING - 3 MONTHS
ADOBE PHOTO SHOP - 1 MONTH
ADOBE PAGE MAKER - 1 MONTH
COREL DRAW - 1 MONTH
அனைத்துப் பாடத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கவுள்ளது. குறுகியகாலத்திற்குள் நீங்கள் விரும்பிய பாடநெறியினைக் கற்றுத்தேற உடன் விரையுங்கள்.
E - mail : sky com@wow.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomrrow you lead

# மரண அறிவித்தல்கள்

## செல்வநாயகம் இரத்தினதேவி

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் இரத்தினதேவி நேற்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம (புத்தளம்) அவர்களின் அன்பு மனைவியும் பாலேந்திரன் (பாலன், தம்பி நிர்வாக இயக்குநர், நலன் பாமசூட்டிகல்) அவர்களின் அன்புத் தாயாரும் திருமதி பாலன் நவசக்தியின் அன்பு மாமியும், நிரோசா, செந்தூரன், செந்தளன், சீத்தாலஷ்மி, துர்க்காலஷ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2005) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*இல.111,ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடி, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.* (43356)(11-17-30)

தகவல்: பாலேந்திரன் (பாலன், தம்பி) (நிர்வாக இயக்குநர், நீலன் பாமசூட்டில்கல்).

## சிற்றம்பலம் வரதராசா

(ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர் - இலங்கை வங்கி)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் வரதராசா அவர்கள் 19.03.2005 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2005) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*Mrs. A.VARATHARAJA, 93/5A, GALLE ROAD, HILDA LANE. DEHIWALA. T.P.: 0114 201992.* (சி-41627)(11-17-30)

தகவல்: திருமதி ச.ஞானப்பிரகாசம் (அண்ணி).

## வாமதேவன் இராஜரட்ணம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வாமதேவன் இராஜரட்ணம் அவர்கள் நேற்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திருநெல்வேலி, மாரியம்மன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

*மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.* (சி-43357)(11-17-30)

தகவல்: ஜீவராஜா (மகன்).

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா மரியாம்பிள்ளை (சம்மாட்டியார்)



போயிட்டி, இளவாலையைச் சேர்ந்த செல்லையா மரியாம்பிள்ளை நேற்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.03.2005) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு போயிட்டி லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலிப்பூசையின் பின்னர் நல்லடக்கத்துக்காக போயிட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*போயிட்டி, இளவாலை.*

தகவல்: A.R.விஜயகுமார் (விஜயன் - மருமகன்) (43344)(11-17-30) (ஆசிரியர், புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை).

## குமாரவேலு வைகுந்தவாசன்

மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அத்தியடியை வதிவிடமாகவும் கொண்ட குமாரவேலு வைகுந்தவாசன் அவர்கள் நேற்று (20.03.2005) ஞயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.03.2005 செவ்வாய்க்கிழமை நடைபெறும். விவரம் நாளைய உதயனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.35,வைமன் வீதி, நல்லூர்.* (43350)(11-17-30)

தகவல்: பரமேஸ்வரி (சகோதரி - ஆசிரியை)

## முத்தையா பரமேஸ்வரன்

(கலைஞான கேசரி - பரா ஆட்ஸ் நயினை)

நயினாதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முத்தையா பரமேஸ்வரன அவர்கள் நேற்று (20.03.2005) ஞயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின இறுதிக் கிரியைகள் 21.03.2005 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.30 மணியளவில் நயினாதீவு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆம் வட்டாரம், நயினாதீவு.* (43353)(11-17-30)

தகவல்: மு.சுந்தரேஸ்வரன் (ஓவியர் - சகோதரன்).

## சதாசிவம் சதானந்தன்

(தேசிய தொழிற்பயிற்சி பரிசோதகர் N.A.I.T.A யாழ்ப்பாணம்)

அராலியைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சதானந்தன் நேற்று 20.03.2005 காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பண்ணாகம், சுழிபுரம். (சி-41628)(11-17-30)

தகவல்: மனைவி, பிள்ளைகள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.